# வருவாய்த்துறை அலுவலர் சங்கக்குரல்

# Varuvaithurai Aluvalar Sangakural

**தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க மாத இதழ்**

Volume 35 January 2023 Issue 1




**தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மத்திய செயற்குழு கூட்டம் சென்னையில் 26-11-2022-ல் நடைபெற்றது. அதில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் உயர்திரு. குமார் ஜயந்த் இ.ஆ.ப., அவர்கள், வருவாய் நிர்வாக இணை ஆணையர் உயர்திரு. ஜான் லூயிஸ் இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை மாவட்ட, மாவட்ட வருவாய் அலுவலர், திருமிகு. ஏ.ஆர்.ஏ. ஜெயராஜ் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.**

தனிப்பிரதி விலை ரூ.10/-
Per Copy Rs.10/-

ஆண்டு சந்தா ரூ.120/-
Annual Subscription Rs.120/-




26.11.2022ல் சென்னையில் நடந்த தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மத்திய செயற்குழுவில் கலந்து கொண்டு டிசம்பர் 2022ல் ஓய்வு பெற்ற, செங்கல்பட்டு மாவட்டத் தலைவர் தோழர் சுகுமாரன் அவர்கள் 34 வருடங்கள் இடைவிடாத சங்கப் பணியில் தொடர்ந்து பணியாற்றியதற்கு சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்கள்.




திருப்பத்தூர் மாவட்டத்தில், தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்ட நிர்வாகிகள்.




03.12.2022ல் கரூர் மாவட்டத்தில் நடந்த TNROA மாவட்டப் பொதுக்குழுக் கூட்டத்தில் மாநிலத் துணைத் தோழர் குமரேசன் மற்றும் மாநிலச் செயலாளர் தோழர் அன்பழகன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்

தலையங்கம்

# பிப்ரவரி புரட்சி

**ச**மூகத்தின் அனைத்து தரப்பு மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வது மட்டும் அல்லாது, தமிழக அரசின் சிறப்பு திட்டங்களை அமுலாக்கம் செய்வது, சட்டம்-ஒழுங்கு பராமரிப்பு பணி மேற்கொள்வது, வாக்காளர் பட்டியல், தேர்தல் தொடர்பான பணிகள், பேரிடர் மேலாண்மைப் பணிகள் என கடும் பணி நெருக்கடியில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்கள் உழன்று வருகின்றனர்.

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அலுவலர்களின் பணிப்பளு மற்றும் பணிச்சுமைக்கு ஏற்ப மேம்படுத்தப்பட்ட ஊதியம், தனி ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்பது நீண்ட நாள் கோரிக்கையாக இருந்து வருகின்ற நிலையில், இத்துறை அலுவலர்களின் சாதாரண கோரிக்கைகள்கூட ஆண்டு கணக்கில் காலதாமதம் செய்யப்படுவது வாடிக்கையாகி உள்ளது.

இயல்பாக வழங்க வேண்டிய பயிற்சி, ஊதிய உயர்வு, பதவி உயர்வுகளுக்குக்கூட சங்கத்தின் சார்பில் இயக்க நடவடிக்கைகளுக்கு செல்ல வேண்டிய நிலையில் உள்ளது துறை. கடந்த மூன்று ஆண்டுகளாக துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியல் வெளியிடப்படாததால் பல மாவட்டங்களில் பணியிறக்கம் ஏற்படுவதுடன், பணி ஓய்வு பெறவுள்ள முதுநிலை வட்டாட்சியர்களின் பணி உரிமைகள் மற்றும் ஓய்வூதியப் பயன் பாதிக்கப்படுகிறது. பல துறை மற்றும் நிறுவனங்களில் துணை ஆட்சியர் நிலைப் பணியிடங்கள் மாதக்கணக்கில் காலியாக உள்ளதால், இப்பணியிடங்களைத் தொடர்ந்து இழந்து வரும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் வருவாய்த்துறையில் ஒவ்வொன்றாக போராடிப் பெற்ற பணியிடங்கள் மொத்தமாக இழக்கும் அபாயமும், மேலும் அனைத்து நிலை பதவி உயர்வில் தேக்க நிலையும் ஏற்பட்டுள்ளது.

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் இரண்டு கட்ட பேச்சுவார்த்தை நடைபெற்று 5 மாதங்கள் ஆகும் நிலையில், பதவி உயர்வானது நீதிமன்ற நடவடிக்கைகளைக் காரணம் காட்டி காலதாமதம் செய்யப்படுகிறது. இதுகுறித்து உயர் அலுவலர்களை பலமுறை சந்தித்தும் பயன் ஏதுமில்லை.

அதேபோன்று துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தின் காரணமாக பணியிறக்கம் பெறும் அலுவலர்களின் பணிப் பாதுகாப்பிற்கான ஆணைகளில் காலதாமதம் செய்யப்படுகிறது. இவை உள்ளிட்ட முக்கிய கோரிக்கைகள் மீது தீர்வு காண வலியுறுத்தி வருகின்ற 24.01.2023 அன்று சென்னையில் வருவாய் நிர்வாக ஆணையர், வருவாய்த்துறை அரசு செயலாளர் உள்ளிட்டோரிடம் **“பெருந்திரள் முறையீடு”** அளிக்க உள்ளோம். மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் கலந்து கொள்ளும் இவ்வியக்கத்தில் அரசின் அலட்சியத்தை நீக்கி கோரிக்கைகளை நிறைவேற்றும் என நம்புகிறோம்.

இதிலும் அரசு மெத்தனம் காட்டினால், வரும் பிப்ரவரி மாதத்தில் அரசு பணிகள் ஸ்தம்பிக்கும் வகையில் வலிமையான இயக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள உள்ளோம்.

நாம் மேற்கொள்ளும் இயக்கங்கள், பெயர் மாற்ற விதி திருத்தம், அனைத்து நிலை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம், தனி ஊதியம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளுக்கு வலு சேர்ப்பதாக அமையட்டும்.

மேலும் **பங்களிப்பு ஓய்வூதியம் ரத்து, ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு இணையாக அகவிலைப்படி உயர்வு, ஈட்டிய விடுப்பு சரண் ஊதியம் உள்ளிட்ட கோரிக்கைகளை வென்றெடுக்க ஜாக்டோ-ஜியோ பேரமைப்பின் இயக்கங்களில் முழுமையாக பங்கேற்போம்! வரலாறு படைப்போம்!** ■

மத்திய செயற்குழு கூட்ட முடிவுகள்

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

*(அரசாணை எண்.2141, பொதுத் (பணி-அ) துறை, நாள் : 6.10.66ன்படி அங்கீகரிக்கப்பட்டது)*

## THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION

## மாநில மையம்

*க.எண்.12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005*

*நாள்: 26.11.2022*

# மத்திய செயற்குழு கூட்ட முடிவுகள் - சென்னை

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மத்திய செயற்குழு கூட்டம் 26.11.2022 அன்று தலைநகர் சென்னை மாநகர் "பயாஸ்" திருமண மண்டபத்தில் மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தலைமையில் நடைபெற்றது. பொதுச்செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் கடந்தகால நடவடிக்கைகளை எடுத்துரைத்தார். மத்திய செயற்குழு கூட்டத்தின் முதல் நிகழ்வாக சங்கக் கொடியினை மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் ஏற்றி வைத்தார். சென்னை மாவட்டத் தலைவர் திரு.கே.சி.ராம்குமார் வரவேற்புரை ஆற்றினார். அஞ்சலி தீர்மானத்தை மாநிலத் துணைத் தலைவர் திரு.ஆர்.எஸ்.ராஜகோபால் முன்மொழிந்தார்.

கடந்த 06.08.2022 அன்று சேலம் மாநகரில் நடைபெற்ற மத்திய செயற்குழுவிற்கு பின்பாக இயற்கை எய்திய வருவாய்த்துறை அலுவலர்களுக்கு இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

சுமார் 13 ஆண்டுகளுக்குப் பின்பாக, தலைநகர் சென்னை மாநகரில் நடைபெற்ற இச்சிறப்பு வாய்ந்த மத்திய செயற்குழுக் கூட்டத்தில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜயந்த் இ.ஆ.ப., வருவாய் நிர்வாக இணை ஆணையர் திரு.அ.ஜான் லூயீஸ் இ.ஆ.ப., மற்றும் சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஏ.ஆர்.ஏ. ஜெயராஜ் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தனது தலைமை உரையில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் கடந்த 16.08.2022 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற பேச்சு வார்த்தையில் அளிக்கப்பட்ட உறுதிமொழியினைத் தொடர்ந்து கடந்த 06.08.2022 அன்று சேலம் மத்திய செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி நடைபெறவிருந்த வெளிநடப்பு ஆர்ப்பாட்டம் மற்றும் அலுவலக உதவியாளர் முதல் வட்டாட்சியர் வரை 14000 வருவாய்த்துறை அலுவலர்கள் பங்கேற்கும் இரண்டு நாட்கள் தற்செயல் விடுப்பு போராட்டம் ஆகியவை தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டதாக தெரிவித்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் தொடர் இயக்க நடவடிக்கைகளின் காரணமாக வருவாய்த்துறையில் பணிபுரிந்து வரும் பட்டதாரி அல்லாத அலுவலர்களின் பணியிறக்கம் வெகுவாக குறைக்கப்பட்டுள்ளதாகவும், பணியிறக்கத்திலிருந்து பாதுகாத்திட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் கடந்த 01.11.2022 அன்று சென்னையில் நடைபெற்ற உயர் அலுவலர்களுடனான பேச்சு

வார்த்தையின்போது, மாநில மையத்தின் சார்பில் பதவியிறக்கத்தின் பாதிப்பு குறித்து வலுவாக எடுத்துரைக்கப்பட்டதின் அடிப்படையில், பணியிறக்கம் பெறும் அலுவலர்களை பாதுகாத்திட ஆணையரகம் மற்றும் அரசு மட்டத்தில் தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். மேலும் மாண்பமை உச்ச நீதிமன்றத் தீர்ப்பின் காரணமாக எந்தவொரு அலுவலருக்கும் பாதிப்பில்லாத வகையில் நடவடிக்கை எடுத்திட அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தப்பட்டு வருவதையும் எடுத்துரைத்தார்.

மாநில மையத்தின் தொடர் முயற்சிகளைத் தொடர்ந்து, இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் ஆகிய பணியிடங்களை முறையே இளநிலை வருவாய் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் என பெயர் மாற்றம் செய்து 2016-ம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு ஆறு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை விதித்திருத்தம் வெளியிடப்படவில்லை. எனவே இதில் மேலும் காலம் தாழ்த்தாமல் ஒரு மாத காலத்திற்குள் உரிய விதி திருத்தங்களை வெளியிட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போது அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் மாநில குடிமைப்பணியில் (State Civil Service) வருவாய்த்துறையைப் பாதிக்கும் எந்த மாற்றத்தையும் மேற்கொள்ள மாநில மையம் ஒருபோதும் அனுமதிக்காது எனவும், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம், மாநில வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை மற்றும் மாநகராட்சிகள் போன்ற இதர துறைகளில் வருவாய்த்துறைக்கு ஒப்பளிக்கப்பட்ட பணியிடங்கள் ஒவ்வொன்றாக பிற துறை பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டு வருவதாகவும், எனவே இதனைத் தவிர்த்திட கடந்த மூன்றாண்டுகளாக வெளியிடப்படாமல் உள்ள துணை ஆட்சியர் பட்டியலை 31.12.2022-க்குள் வெளியிட உரிய தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

நில அளவைத் துறையிலிருந்து அமைச்சுப்பணியாளர்களை வருவாய்த்துறைக்கு ஒருவழி மாவட்ட மாறுதல் செய்திட எடுக்கப்பட்ட நடவடிக்கை வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் தலையீட்டின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மாநில மையத்தின் தீவிர முயற்சியின் காரணமாக 730 வருவாய்த்துறை பணியாளர்களுக்கு மாவட்ட தலைநகரங்களிலேயே நில அளவை மற்றும் நிலவரித்திட்ட பயிற்சி அளித்திட ஆணை பெறப்பட்டுள்ளது என்பது குறித்தும் தெரிவித்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற 17.02.2021 முதல் 26.02.2021 வரையிலான 10 நாட்கள் வேலை நிறுத்த காலம் தகுதியுள்ள விடுப்பாக வரன்முறை செய்து வெளியிடப்பட்டுள்ள அரசாணை மற்றும் மூன்று ஆண்டுகளுக்கு உட்பட்ட அலுவலக உதவியாளர் பணியிடங்களைத் தொடர்புடைய மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களின் மூலம் நிரப்பிட அனுமதித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை முதன்மைச் செயலர் அளித்துள்ள கடிதம் ஆகியவை நமது ஒற்றுமையின் காரணமாக பெறப்பட்டவையே என்றும் தெரிவித்தார்.

முதுநிலை வருவாய் ஆய்வாளர், இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் ஆகிய நிலையில் மாவட்ட மாறுதல் கோரி மிகுதியான விண்ணப்பங்கள் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளதால் இதனை விரைந்து முடித்திடும் விதமாக கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வழங்கப்படுவது போன்றே இணைய வழி மாவட்ட மாறுதல் நடவடிக்கையினை உடன் தொடங்கிட வருவாய் நிர்வாக ஆணையரகத்திடம் வலியுறுத்துவது, நீதிமன்ற வழக்கு தொடர்பாக உயர்நீதி மன்றம் மற்றும் பல்வேறு மாவட்ட நீதிமன்றங்களுக்கு செல்லும் வருவாய்த்துறை அலுவலர்கள் சந்தித்துவரும் பிரச்சனைகள் மற்றும் அரசு

வழக்குரைஞர்களின் செயல்பாடுகள் ஆகியவை குறித்து உயர் நீதிமன்ற பதிவாளரிடம் வலியுறுத்துதல் ஆகிய பணிகள் விரைந்து மாநில மையத்தால் மேற்கொள்ளப்படும் எனவும் உறுதியளித்தார்.

மேற்கொண்ட இயக்கங்கள் மற்றும் பெற்ற அரசாணைகளைவிட தற்போது சந்தித்து வரும் பிரச்சனைகள் அதிகமானதாக இருப்பதாகவும், இதனை எதிர்கொள்ள அமைப்பை மேலும் வலிமைப்படுத்த வேண்டும் எனவும், பத்திற்கும் மேற்பட்ட பணி நிலையில் 14,000 உறுப்பினர்களை கொண்ட சங்கத்தில் நாளது தேதிவரை 10000 உறுப்பினர்களுக்கான இணைப்புக்கட்டணம் மட்டுமே செலுத்தப்பட்டுள்ளதாகவும், இதனை துரிதபடுத்தி ஒரு உறுப்பினர்கூட விடுதலின்றி அனைத்து உறுப்பினர்களுக்கும் உரிய இணைப்பு கட்டணம், நிலுவையிலுள்ள சங்கக்குரல் சந்தா, மாநில மைய கட்டட நிதி, TNGEA மாநாட்டு நிதி மற்றும் 2022-ம் ஆண்டிற்கான மாநில மைய நாட்காட்டி நிதி ஆகியவற்றை எதிர்வரும் 31.12.2022க்குள் செலுத்திட மாவட்ட மையங்கள் விரைந்து செயல்பட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

தற்போது எதிர் கொண்டுள்ள கோரிக்கைகளான துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தில் நிரந்தர தீர்வு, எதிர்கால பதவி உயர்விற்கான ஆணைகள், அலுவலக உதவியாளர், இரவுக் காவலர் மற்றும் மசால்சி பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் நிரப்புவது, இளநிலை/முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்றம் விதிதிருத்தம் அரசாணை, துணை ஆட்சியர் பட்டியல் மற்றும் பதவி உயர்வு, தேர்தல் செலவின நிதி ஒதுக்கீடு மற்றும் வாக்காளர் பட்டியல் சிறப்பு பணியிடங்கள், முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் ஒருங்கிணைந்த பணி முதுநிலை பட்டியல் தீர்வு, புதிய அலகுகள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளில் விரைவில் தீர்வு காணவேண்டியதன் அவசியத்தை விரிவாக எடுத்துரைத்தார். மேலும், பொதுமக்களுக்கான சான்றிதழ்கள் வழங்குதல், இ-அலுவலகம் நடைமுறைப்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு பணி நெருக்கடிகளுக்குத் தீர்வு காணவேண்டிய அவசியம் குறித்தும், அரசின் நிலைப்பாடு குறித்தும் எடுத்துரைத்தார்.

உயர்ந்துவரும் அச்சு காகித விலை உயர்வுக்கேற்ப ஜனவரி, 2023 முதல் சங்கக்குரல் ஆண்டு சந்தா ரூ.200/-ஆக உயர்த்தப்படுவதாகவும், மேலும் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் செயல்பாடுகளுள் ஒரு மைல்கல்லாக வருவாய்த்துறைத் தொடர்பான விதிகள் அடங்கிய நாட்குறிப்பு முதன்முதலாக வெளியிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், மாவட்டத்திற்கு 100 நாட்குறிப்புகள் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், மாவட்டங்களின் தேவைக்கேற்ப இந்த எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் கோரிக்கையை ஏற்று சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு வட்டாட்சியர்கள் மற்றும் ஒரு பெண் வருவாய் ஆய்வாளரின் தொலை தூர மாவட்ட மாறுதல்களை இரத்து செய்து, மீண்டும் சென்னை மாவட்டத்திலேயே நியமனம் செய்ய ஆணையிட்ட மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அரசு செயலாளர், வருவாய் நிருவாக ஆணையர் உள்ளிட்ட அனைத்து அலுவலர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

இறுதியில் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம் பெறுவது, பங்களிப்பு ஓய்வூதியத்தை ரத்து செய்து அனைவருக்கும் பழைய ஓய்வூதியம் பெற்றுத்தருவது, நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சரண்விடுப்பு ஒப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படி உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை நிச்சயம் வென்றிட வேண்டும் எனவும், அதற்கேற்றவாறு நமது செயல்பாடுகள் அமைந்திட வேண்டும் என தெரிவித்தார்.

மத்திய செயற்குழு கூட்டத்தை வெகு சிறப்பாக ஏற்பாடு செய்துள்ள மாநிலத் துணைத் தலைவர் திரு.ஆர்.எஸ்.இராஜகோபால், மாவட்டத் தலைவர் திரு.கே.சி.இராம்குமார், மாவட்ட

செயலாளர் திரு.இராமு மற்றும் மாவட்டப் பொருளாளர் திரு.குமரன் உள்ளிட்ட அனைத்து மாவட்ட நிர்வாகிகள், வட்டக்கிளை நிர்வாகிகள் மற்றும் சென்னை மாவட்ட அனைத்து உறுப்பினர்களையும் வெகுவாக பாராட்டினார்.

பொதுச் செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் கடந்த 06.08.2022-ல் நடைபெற்ற சேலம் மத்திய செயற்குழு கூட்டத்திற்கு பின்பாக எடுக்கப்பட்ட கடந்த கால நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார். குறிப்பாக கடந்த 25.08.2022, 11.09.2022, 05.11.2022 மற்றும் 21.11.2022 ஆகிய தினங்களில் நடைபெற்ற மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் வருவாய்த்துறை அலுவலர்களின் நலன் சார்ந்த கோரிக்கைகள் குறித்து பல்வேறு தீர்மானங்கள் இயற்றப்பட்டு உயர் அலுவலர்களிடம் அளிக்கப்பட்டுள்ளது குறித்தும், மேலும் கடந்த 16.08.2022 மற்றும் 01.11.2022 ஆகிய இரண்டு தினங்கள் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற உயர் அலுவலர்களுடனான கூட்டுக்குழுக் கூட்டத்தில் பட்டதாரி அல்லாதோர் பதவி உயர்வு மூன்றாண்டுகளாக வெளியிடப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள துணை ஆட்சியர் பட்டியலை உடன் வெளியிடுவது, வருவாய்த்துறை அலுவலர்களின் 10 நாட்கள் வேலை நிறுத்த போராட்ட காலத்தினை வரன்முறைப்படுத்துதல் மற்றும் காலியாகவுள்ள அலுவலக உதவியாளர் பணியிடங்களை நிரப்புதல் உள்ளிட்ட வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதாரம் சார்ந்த கோரிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது குறித்தும் தெரிவித்தார்.

கடந்த 16.09.2022 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை மதுரையில் சந்தித்து வருவாய்த்துறையில் துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தின் காரணமாக பணியிறக்கம் பெறும் அலுவலர்களின் பாதிப்புகள் குறித்தும், அதனை சரிசெய்வது தொடர்பாக மாநில மையத்தின் சார்பில் வேண்டுகோள் வைக்கப்பட்டது குறித்தும், மேலும் அரசு ஊழியர்கள்/ஆசிரியர்கள் ஆகியோரின் வாழ்வாதார கோரிக்கையான பழைய ஓய்வூதியத்தினை மீண்டும் வழங்கிடவேண்டுமென வலியுறுத்தப்பட்டது குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மாநில மையத்தின் சார்பில் கடந்த 20.09.2022 அன்று விருதுநகரிலும், 23.09.2022 மற்றும் 12.10.2022 ஆகிய இரு தினங்கள் சென்னையிலும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களை சந்தித்து வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதாரம் சார்ந்த பெருவாரியான கோப்புகள் தலைமைச்செயலகத்தில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளது எனவும், எனவே இதுகுறித்து வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் வருவாய்த்துறை செயலர் உள்ளிட்ட உயர் அலுவலர்களிடம் பேசி உரிய தீர்வினை பெற்றுத்தருமாறு வலியுறுத்தப்பட்டது குறித்தும் தெரிவித்தார்.

கடந்த 12.10.2022 அன்று தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு.வெ.இறையன்பு இ.ஆ.ப., மற்றும் கடந்த 23.09.2022 அன்று மாண்புமிகு முதலமைச்சரின் தனிச்செயலர்-II திரு.எம்.எஸ்.சண்முகம் இ.ஆ.ப., ஆகியோரை தலைமைச் செயலகத்தில் சந்தித்து மாநில குடிமைப் பணியில் பிறதுறை அலுவலர்களையும் சேர்த்து தமிழ்நாடு நிர்வாக பணியமைப்பு எனும் புதிய பணியமைப்பை உருவாக்குவதால் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு ஏற்படும் கடுமையான பாதிப்புகள் குறித்து விரிவாக முறையீடு அளித்து பேசப்பட்டதையும் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்களின் முக்கிய கோரிக்கைகள் குறித்து வலியுறுத்தியதையும், எடுத்துரைத்தார்.

கடந்த 12.10.2022 அன்று மாநில மையத்தின் சார்பில் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ நிதித்துறைச் செயலாளர் திரு.என்.முருகானந்தம் இ.ஆ.ப., அவர்களைச் சந்தித்து 2021 சட்டமன்ற தேர்தல் முடிவுற்று 18 மாதங்களாக ஆகியும் தேர்தல் செலவினத்திற்கான நிதி ஒதுக்கீடு இதுவரை

வழங்கப்படாதது குறித்தும், 6 சட்டமன்ற தொகுதிக்கு மேற்பட்ட மாவட்டங்களில் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடங்கள் ஏற்படுத்துதல் தொடர்பாக விரிவான முறையீடு அளித்து பேசப்பட்டது குறித்தும், மேலும் அரசு முதன்மைச் செயலாளர்/பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறைச் செயலாளர் திரு.மங்கத்ராம் சர்மா இ.ஆ.ப., அவர்களைச் சந்தித்து தமிழக அரசினால் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 6 மாவட்டங்களில் இயங்கிவரும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள துணை வட்டாட்சியர் நிலையிலான கண்காணிப்பாளர் பணியிடங்களில் வருவாய்த்துறையினரை நியமனம் செய்திட கோரி விரிவான முறையீடு அளித்து பேசப்பட்டது குறித்தும் தெரிவித்தார்.

தமிழக முதன்மை தேர்தல் அலுவலர் திரு.சத்ய பிரத சாஹூ இ.ஆ.ப., அவர்களைச் சந்தித்து 2021-சட்டமன்ற தேர்தல் முடிவுற்று 18 மாதங்களாகியும் தேர்தல் செலவினத்திற்கான நிதி ஒதுக்கீடு இதுவரை வழங்கப்படாதது குறித்தும், 6 சட்டமன்ற தொகுதிக்கு மேற்பட்ட மாவட்டங்களில் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடங்கள் ஏற்படுத்துதல் குறித்தும், கடந்த 22.11.2022 அன்று நில அளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் திரு.ட்டி.ஜி.வினய் இ.ஆ.ப., அவர்களைச் சந்தித்து மாநிலம் முழுவதும் நில அளவை மற்றும் நிலவரித்திட்ட பயிற்சியினை எதிர்நோக்கி மிகுதியான அலுவலர்கள் காத்திருப்பில் உள்ளதால் அவர்களின் எதிர்கால பதவி உயர்வினை கருத்தில் கொண்டு மாவட்டத் தலைநகரில் பயிற்சி அளித்திட வலியுறுத்தி விரிவான முறையீடு அளித்து பேசப்பட்டது குறித்தும் எடுத்துரைத்தார்.

அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர், திரு.எஸ்.கே.பிரபாகர் இ.ஆ.ப., வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜயந்த் இ.ஆ.ப., மற்றும் வருவாய் நிர்வாக இணை ஆணையர் திரு.அ.ஜான் லூயிஸ் இ.ஆ.ப., உள்ளிட்ட உயர் அலுவலர்களை முறையே கடந்த 12.08.2022, 23.09.2022, 12.10.2022 மற்றும் 22.11.2022 ஆகிய தினங்களில் சந்தித்து துணை வட்டாட்சியர் பட்டியல் திருத்தத்தின் காரணமாக பணியிறக்கம் பெறும் பட்டதாரி அல்லாத அலுவலர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் பதவி உயர்வு வழங்குதல், அலுவலக உதவியாளர் காலிப்பணியிடங்களை உடன் நிரப்புதல், முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்றம் விதித்திருத்த அரசாணை, புதுக்கோட்டை மாவட்ட முதுநிலை தொடர்பான சீராய்வு மனுவின்மீது ஆணை பிறப்பித்தல், மதுரை, தேனி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் முதுநிலை தொடர்பான பரிந்துரை மற்றும் கொரோனா பெருந்தொற்றில் பாதிக்கப்பட்ட இளநிலை வருவாய் ஆய்வாளர்களின் தகுதிகாண் பருவம் விளம்புகை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக விரிவாக ஆலோசனை செய்யப்பட்டது குறித்தும் எடுத்துரைத்தார்.

இச்செயற்குழு கூட்டத்தில் மாநிலத் துணைத் தலைவர் திரு.இரா.மங்களபாண்டியன் அனுமதி பெற்று கலந்து கொள்ளவில்லை. பெரம்பலூர் மாவட்ட மையம் சார்பாக நிருவாகிகள் இச்செயற்குழுவில் கலந்துகொள்ளவில்லை.

இச்சிறப்பு வாய்ந்த மத்திய செயற்குழுக் கூட்டத்தில் வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், அரசு முதன்மைச் செயலர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை திரு.குமார் ஜயந்த் இ.ஆ.ப., வருவாய் நிர்வாக இணை ஆணையர் திரு.அ.ஜான் லூயிஸ் இ.ஆ.ப., மற்றும் சென்னை மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஏ.ஆர்.ஏ.ஜெயராஜ் ஆகியோருக்கு சால்வை அணிவித்து நினைவுப்பரிசு வழங்கப்பட்டது.

அனைத்து மாவட்டங்களின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள்/நிருவாகிகளின் செழுமையான கருத்துக்கள் ஆக்கபூர்வமான விவாதங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக இயற்றப்பட்டன.

**நடவடிக்கைத் தீர்மானம் - 1:**

ஒன்றிய அரசு ஊழியர்களுக்கு இணையாக 01.07.2022 முதல் 4% அகவிலைப்படி உயர்வு வழங்குதல், சரண் விடுப்பு ஒப்படை ஊதியம் வழங்குதல் மற்றும் பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை ரத்து செய்து மீண்டும் பழைய ஓய்வூதியத்திட்டத்தினை அமுல்படுத்துதல் உள்ளிட்ட அரசு ஊழியர், ஆசிரியர்களின் வாழ்வாதார கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்வரும் 09.12.2022 அன்று அனைத்து மாவட்ட மையங்கள் மற்றும் மாநில மையத்தின் சார்பில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நிகரிச் (Fax Message) செய்தி அனுப்புவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 2:**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்களுக்கு மாவட்டத் தலைநகரிலேயே நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட பயிற்சி அளித்தல், 10 நாட்கள் வேலை நிறுத்தப் போராட்ட காலம் வரன்முறை மற்றும் மூன்றாண்டுக்கு உட்பட்ட அலுவலக உதவியாளர் காலியிடங்களை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் நிரப்பிட அனுமதி ஆகிய கோரிக்கைகளை மத்திய செயற்குழு கூட்டத்திற்கு முதல் நாளே நிறைவேற்றியதோடு, தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மத்திய செயற்குழு கூட்டத்தில் கலந்துகொண்டு அனைத்து கோரிக்கைகளையும் உரிய காலத்தில் நிறைவேற்றுவதாக உறுதியளித்துள்ள மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.கே..கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன், மதிப்பிற்குரிய வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அரசு முதன்மைச் செயலாளர் திரு.குமார் ஜயந்த் இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிர்வாக ஆணையர் திரு.எஸ்.கே.பிரபாகர் இ.ஆ.ப., மற்றும் இணை ஆணையர் (வருவாய் நிருவாகம்) திரு.அ.ஜான் லூயிஸ் இ.ஆ.ப., ஆகியோருக்கு இம்மத்திய செயற்குழு வரவேற்பையும், நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம் - 3:**

வருவாய்த் துறையில் கடந்த மூன்று ஆண்டுகளாக துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியல் வெளியிடப்படாததால் பல்வேறு துணை ஆட்சியர் நிலையிலான பணியிடங்கள் காலியாகவும், சில பணியிடங்கள் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலை வரை பதவி உயர்வில் மிகுந்த தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு நிலுவையில் உள்ள துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியலை 31.12.2022-க்குள் வெளியிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 4:**

தமிழகம் முழுவதும் வருவாய்த்துறையில் 2009-ம் ஆண்டு முதல் துணை வட்டாட்சியர் பட்டியல்கள் திருத்தம் செய்து வெளியிடப்பட்டதில் பல முதுநிலை அலுவலர்கள் முதுநிலை வருவாய் ஆய்வாளர்களாக பணியிறக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்நிகழ்வு பணியிறக்கம் பெறும் அலுவலர் மட்டுமின்றி அனைத்து வருவாய்த்துறை அலுவர்களிடையே கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. எனவே பட்டியல் திருத்தத்தின் காரணமாக எந்தவொரு அலுவலருக்கும் பணியிறக்கம் ஏற்படாதவாறும், மேலும் பதவி உயர்வு உத்திரவாதம் ஏற்படுத்திட ஏதுவாக அரசுமட்டத்தில் உரிய ஆணைகளை உடன் வழங்கிடுமாறும் தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

**தீர்மானம் - 5:**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் பெரும் முயற்சியின் காரணமாக இளநிலை உதவியாளர், உதவியாளர் ஆகிய பணியிடங்களை முறையே இளநிலை வருவாய் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் என பெயர் மாற்றம் செய்து 2016-ம் ஆண்டில் அரசாணை

வெளியிடப்பட்டு ஆறு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை விதித்திருத்தம் வெளியிடப்படாததால் அரசாணையினை நடைமுறைப்படுத்திட இயலவில்லை. எனவே இதில் மேலும் காலம் தாழ்த்தாது 15.01.2023-க்கு முன்பாக உரிய விதித் திருத்தங்களை வெளியிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 6:**

வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திடும் பணிக்கு ஆறு சட்டமன்ற தொகுதிகள் கொண்ட மாவட்டங்களில் நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடங்கள் ஏற்படுத்துதல், தமிழக சட்டமன்ற தேர்தல் முடிவுற்று 18 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், இதுவரை தேர்தல் செலவினங்கள் முழுமையாக வழங்கப்படாதது மற்றும் வருவாய்த்துறையில் தேர்தல் பிரிவில் பணியாற்றி வரும் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை நிரந்தரப்படுத்துதல் ஆகியவற்றை 15.01.2023-க்குள் நிறைவேற்றிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 7:**

முதுநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில் ஒருங்கிணைந்த பணி முதுநிலை நிர்ணயித்தல் தொடர்பாக மதுரை, தேனி மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வருவாய்த்துறை அலுவலர்களை நேரடி விசாரணை மேற்கொண்டு, வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள பரிந்துரையின் மீது நிரந்தர தீர்வினை உடன் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 8:**

புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலகில் கடந்த 04.04.2012 அன்று முதுநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. மிகுதியான அளவில் காலிப்பணியிடம் இருந்தும், உரியகாலத்தில் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. இதனால் பட்டியலில் இடம்பெற்றிருந்த அலுவலர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனை சரிசெய்திட கோரி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்ட முன்மொழிவு அரசிடம் நிலுவையில் உள்ளது. எனவே இதன் மீது விரைந்து ஆணை வழங்கிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவுசெய்யப்பட்டது.

**தீர்மானம் - 9:**

மாவட்ட பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், ஆதிதிராவிடர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், மாநகராட்சிகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் (TASMAC) மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் (TSCSC) உள்ளிட்ட அலுவலகங்களில் வருவாய்த்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியிடங்களில் பிறதுறை அலுவலர்களைக் கொண்டு நிரப்பக்கூடாது என்றும், எந்த நிலையிலும் பணியிட இழப்பு ஏற்படுத்துதல் கூடாது என்றும் தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 10:**

மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்புரையின் அடிப்படையில் மாநில குடிமைப் பணியில் (State Civil Service) வருவாய்த்துறை அல்லாத பிறதுறை அலுவலர்களையும் சேர்த்து தமிழ்நாடு நிர்வாக பணியமைப்பு (Tamil Nadu Administrative Service) என்ற புதிய பணியமைப்பினை ஏற்படுத்த முயற்சிப்பதினால் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு பதவி உயர்வில் பாதிப்பு மட்டுமின்றி நிர்வாக குளறுபடிகள் ஏற்படும். எனவே வருவாய்த்துறையை பாதிக்கும் இச்செயலை உடனடியாக கைவிட வேண்டுமெனவும், அவ்வாறு ரத்து செய்திட தவறும்பட்சத்தில் உடனடியாக வேலை நிறுத்தம் உள்ளிட்ட இயக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதென ஒருமனதாக முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 11:**

வருவாய்த்துறையில் தற்போது மிகுந்த பணி நெருக்கடியுடன் அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் பல்வேறு சான்றிதழ்கள் கோரி மிகுதியான அளவில் மனுக்கள் வருவதால் அவற்றினை முடிவு செய்வதில் ஏற்படும் காலதாமதத்தினை சரிசெய்திடும் வகையில் சான்றிதழ் வழங்கும் பணிக்கென வட்டத்திற்கு ஒரு துணை வட்டாட்சியர் பணியிடங்களை ஏற்கனவே உள்ள நடைமுறையின்படி நிரந்தரமாக உருவாக்கிட தமிழக அரசினை வலியுறுத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

**தீர்மானம் - 12:**

16.08.2022 மற்றும் 01.11.2022 ஆகிய தேதிகளில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற உயர் அலுவலர்களுடனான பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் அனைத்து கோரிக்கைகளையும் 15.01.2023-க்குள் நிறைவேற்றிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 13:**

வருவாய்த்துறையில் அலுவலக உதவியாளர் முதல் மாவட்ட வருவாய் அலுவலர் வரையிலான அனைத்து அலுவலர்களின் பணிப்பளு மற்றும் பணித்தன்மையினை கருத்தில் கொண்டு வருவாய்த்துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 14:**

மாவட்ட வருவாய் அலகுகளிலிருந்து மாவட்ட மாறுதல் கோரி அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவுகள் வருவாய் நிர்வாக ஆணையரகத்தில் மிகுதியான அளவில் நிலுவையில் உள்ளன. மேலும் முதுநிலை வருவாய் ஆய்வாளர், இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் ஆகிய நிலைகளில் மாவட்ட மாறுதல் கோரி அனுப்பப்படும் முன்மொழிவுகளை பரிசீலனை செய்து ஆணைப்பிறப்பித்திட அதீத காலதாமதம் ஏற்படுகிறது. இதனால் மாவட்ட மாறுதல் கோரி விண்ணப்பித்துள்ள வருவாய்த்துறை அலுவலர்கள் மிகுந்த மனச்சோர்வுடன் பணிபுரிந்து வருகின்றனர். எனவே வருவாய்த்துறையில் பணிபுரிந்துவரும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கு இணையவழி கலந்தாய்வின் மூலம் வழங்கப்படும் ஒருவழி/இருவழி மாவட்ட மாறுதல் போன்று முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள், இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியோருக்கும் இணையவழி கலந்தாய்வின் மூலம் மாவட்ட மாறுதல் வழங்கிட நடவடிக்கை எடுத்திடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 15:**

10.3.2022-க்கு முன்பாக சார்நிலை அலுவலர்களுக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முன் ஊதிய உயர்வு வழங்கிட அனுமதியளித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் கடந்த நவம்பர் 2021ல் பரிந்துரை செய்யப்பட்டு, இக்கோப்பு கடந்த ஓர் ஆண்டிற்கும் மேலாக நிலுவையில் உள்ளது. எனவே இதன் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து உரிய ஆணை வெளியிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் - 16:**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் கடந்த 02.02.2016, 03.02.2016, 21.02.2016, 04.10.2018 ஆகிய நான்கு நாட்கள் நடைபெற்ற அடையாள வேலை நிறுத்தம் மற்றும்

*08.01.2019 முதல் 09.01.2019 வரை நடைபெற்ற அகில இந்திய வேலை நிறுத்தம் உள்ளிட்ட 6 நாட்களை பணிக்காலமாக வரன்முறை செய்து ஆணை வழங்கிட வருவாய் நிருவாக ஆணையர் மற்றும் தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.*

***தீர்மானம் - 17:***

*தமிழகத்தில் செயல்பட்டுவரும் வெளிநாட்டு மதுபானம் உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் மற்றும் வடிப்பக ஆலைகளில் தற்போது மிகுதியான அளவில் உற்பத்தி நடைபெறுவதால் அங்கு பணிபுரியும் வருவாய்த்துறை அலுவலர்களின் பணிப் பளுவினை கருத்தில் கொண்டு கூடுதலாக செய்யப்பட்டு வரும் உற்பத்தித் திறனிற்கேற்ப புதிய துணை வட்டாட்சியர் பணியிடங்களை கூடுதலாக ஏற்படுத்திட தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது.*

***தீர்மானம் - 18:***

*வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையில் மணல் கடத்தல், அரிசி கடத்தல், கனிமவள கொள்ளை உள்ளிட்ட பணிகளைத் தொய்வின்றி மேற்கொள்ள பயன்பாட்டிற்கு தகுதியற்ற ஈப்புகளை கழிவு செய்து, வருவாய் வட்டாட்சியர், சமூக பாதுகாப்பு திட்ட வட்டாட்சியர் உள்ளிட்டோருக்கு புதிய ஈப்புகள் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.*

***தீர்மானம் - 19:***

*அரசு பணியில் பார்வைத்திறன்/செவித்திறன் குறைபாடுடைய அலுவலர்களுக்கு பவானிசாகர் அடிப்படை பயிற்சியிலிருந்து ஏற்கனவே விலக்களித்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இதனைப்போன்றே, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில், பார்வைத்திறன்/ செவித்திறன் குறைபாடுடைய வருவாய்த்துறை அலுவலர்களுக்கு ஒரத்தநாடு நில அளவைப் பயிற்சியிலிருந்து விலக்களித்து முதுநிலை வருவாய் ஆய்வாளர் பதவி உயர்வு வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.*

***தீர்மானம் 20:***

*அலுவலக உதவியாளர்/பதிவுரு எழுத்தர் நிலையிலிருந்து இளநிலை வருவாய் ஆய்வாளர் பதவி உயர்வு பெறுவதற்கான தகுதிக் காலத்தை 7 ஆண்டுகளிலிருந்து, 4 ஆண்டுகளாக குறைத்திட முறையீடு செய்யப்பட்டு நிலுவையில் இருப்பதை பரிசீலனை செய்து ஆணைகள் வழங்கவும், அலுவலக உதவியாளர்/பதிவுரு எழுத்தர் நிலைகளில் தகுதி பெற்றவர்களை தட்டச்சர்களாக நியமனம் செய்திட அரசு விதிகளை வலியுறுத்தி அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கு சுற்றறிக்கை அனுப்பிட வருவாய் நிருவாக ஆணையர் அவர்களைக் கேட்டுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது.*

***தீர்மானம் 21:***

*குறுவட்ட வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகள் பல மாவட்டங்களில் பராமரிப்பின்றி சிதலமடைந்துள்ளதைக் கருத்தில் கொண்டு அனைத்து வருவாய் ஆய்வாளர் குடியிருப்புகளைப் புனரமைத்திட வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.*

***தீர்மானம் 22:***

*மாவட்ட வருவாய் அலுவலர், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆகிய பணியிடங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக சில அலுவலர்கள் பணிபுரிந்து வருவதாக நிர்வாக சிக்கல்கள் ஏற்படுவதை கருத்தில் கொண்டு, மேற்கண்ட நிலை அலுவலர்களை உரிய காலத்திற்குள் பணி மாறுதல் அளித்திட வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.*

**தீர்மானம் 23:**

வருவாய்த்துறை அலுவலர்களின் பதவி உயர்வு மேல்முறையீடு, பணிமூப்பு/குற்றச்சாட்டு மேல்முறையீடுகள்/சீராய்வு கோப்புகளைக் காலதாமதமின்றி உரிய காலத்தில் முடிவு செய்திட வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் 24:**

மாண்பமைச் சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரைக் கிளையில் தாக்கல் செய்யப்படும் பல்வேறு வழக்குகளின் அரசு வழக்குரைஞர்களைச் சந்திக்கும் வருவாய்த்துறை அலுவலர்களை மிகுந்த சிரமத்திற்கு உள்ளாக்கும் சில அரசு வழக்கறிஞர்கள் குறித்து அரசிடம் விரிவாக முறையீடு செய்து உரிய தீர்வு காண்பது என முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் 25:**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தை மேலும் வலுப்படுத்திட அனைத்து மாவட்டங்களிலும் உறுப்பினர் இணைப்பு கட்டணம், சங்கக்குரல் சந்தா ஆகியவற்றை 31.12.2022-க்கு முன்பாக 100% நிறைவு செய்திட மாவட்ட மையங்களைக் கேட்டுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது. மேலும், சென்னைத் தலைமையக கட்டட நிதி நிலுவை, சேலம் கோரிக்கை மாநாடு பங்களிப்பு நிதி, அரசு ஊழியர் சங்க மாநாடு நிதி, TNROA நாட்காட்டி நிதி உள்ளிட்ட நிதி நிலுவைகளை விரைவில் செலுத்திட வலியுறுத்தப்பட்டது.

மாவட்ட மையத்தேர்தலை நடத்தாமல் உள்ள மாவட்ட மையங்கள் உடனடியாக தேர்தலை ஜனநாயக முறையில் நடத்திட வலியுறுத்துவது என முடிவு செய்யப்பட்டது. தமிழகத்திலுள்ள 313 வட்டக் கிளைகளிலும் நிர்வாகிகளைத் தேர்வு செய்து புனரமைக்க உரிய நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்யப்பட்டது.

**தீர்மானம் 26:**

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் போர்வாளாக விளக்கும் சங்கக்குரல் மாத இதழில் ஆண்டு சந்தா தொகையை, கடுமையான காகித விலை மற்றும் அச்சு கூலி உயர்வின் காரணமாக ரூ.200 ஆக உயர்த்துவதென முடிவு செய்யப்பட்டது.

இறுதியாக, மாநிலப் பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் அவர்கள் குறுகிய காலத்தில் மத்தியசெயற்குழுக் கூட்டத்தை மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்த சென்னை மாவட்ட நிர்வாகிகளுக்கும், கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

| | |
|---|---|
| S/d | S/d |
| (சு. சங்கரலிங்கம்) | (எம்.பி. முருகையன்) |
| பொதுச் செயலாளர், | மாநிலத் தலைவர், |
| 8220761781 | 9843264332 |

பெறுதல்

மாவட்டத் தலைவர், மாவட்டச் செயலாளர், மாவட்டப் பொருளாளர் மற்றும்

மத்திய செயற்குழு உறுப்பினர்கள், அனைத்து மாவட்டங்கள்.

நகல்: அனைத்து மாநில நிர்வாகிகள்.

■

# தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்

*(அரசாணை எண்.2141, பொதுத் (பணி-அ) துறை, நாள் : 6.10.66ன்படி அங்கீகரிக்கப்பட்டது)*

**THE TAMILNADU REVENUE OFFICIALS' ASSOCIATION**

**மாநில மையம்**

க.எண்.12, கிருஷ்ணப்ப தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005

நாள்: 18.12.2022

# மாநில நிர்வாகிகள் கூட்ட முடிவுகள்

தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டம் 18.12.2022 அன்று நாமக்கல் நகரத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தலைமை வகித்தார். மாநிலப் பொதுச்செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் முன்னிலை வகித்தார். இக்கூட்டத்தில் மாநிலத் துணைத் தலைவர் திரு. ஆர்.எஸ். இராஜகோபால் மற்றும் மாநிலச் செயலாளர் திரு.ஆ.தமிழரசன் ஆகியோர் அனுமதி பெற்று கலந்து கொள்ளவில்லை. மாநிலத் துணைத் தலைவர் திரு.இரா.மங்களபாண்டியன் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. இதர மாநில நிர்வாகிகள் அனைவரும் கலந்துகொண்டனர். நாமக்கல் மாவட்டத் தலைவர் திரு.ஆனந்தன் அனைவரையும் வரவேற்றார் மாவட்டச் செயலாளர் திரு.விஜயகாந்த் மாவட்டம் சார்ந்த கோரிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார்.

மாநிலத் தலைவர் திரு.எம்.பி.முருகையன் தனது உரையில், கடந்தகால நடவடிக்கைகளில் மாநில மையத்தின் செயல்பாடுகள் திருப்திகரமாக இருந்ததாகவும், கடந்த 26.11.2022-ல் சென்னையில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்திற்கு பின்பாக அளிக்கப்பட்ட முறையீடுகள் குறித்தும் உயர் அலுவலர்களின் சந்திப்பு குறித்தும் விரிவாக எடுத்துரைத்தார்.

மாநிலத் தலைவர் தனது உரையில், பல மாவட்டங்களில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அலுவலர்கள் பணியிறக்கம் பெற்று வருவதையும், இதனை தவிர்த்திட சங்கத்தின் சார்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளை விவரித்தார். மேலும், துணை ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் பதவி உயர்வுகள் உரிய காலத்தில் வழங்கப்படாததால் அலுவலர்களுக்கான பாதிப்புகள் மட்டுமின்றி துறை மற்றும் நிர்வாக பாதிப்பு குறித்து அரசிடம் வலியுறுத்தியும் தீர்வு எட்டப்படாதது குறித்து எடுத்துரைத்தார்.

மூன்று ஆண்டுகளுக்கான துணை ஆட்சியர் பட்டியல் வெளியிட சங்கத்தின் சார்பில் அரசிடம் வலியுறுத்தி பெற்றால் மட்டுமே பணியிட பறிப்பு பாதிப்புகளை தவிர்க்க இயலும் எனத் தெரிவித்தார்.

வருவாய்த்துறை அலுவலர்கள் பணியமர்த்தப்பட்ட பல பணியிடங்களில் சமீபகாலமாக பிற துறை அலுவலர்களைப் பணியமர்த்த முயற்சிப்பதும், இதனை சங்கத்தின் சார்பில் ஆட்சேபனை/ எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டு நிறுத்தம் செய்யப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

வருவாய்த்துறை அலுவலர்களின் அநேக கோரிக்கைகள் அரசிடம் தொடர்ந்து நிலுவையாக உள்ளது குறித்தும், எனவே இதுகுறித்து அரசுக்கு தொடர் அழுத்தம் கொடுத்து கோரிக்கைகளை வென்றெடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது தொடர்பாகவும் விரிவாக எடுத்துரைத்தார்.

மேலும் ஸ்தாபனத்தை வலுப்படுத்துவது குறித்தும், அனைத்து வட்டக் கிளைகளுக்கும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், தேர்தல் நடத்தப்படாத மாவட்டங்களில் உடனடியாக தேர்தலை நடத்திட பொறுப்பு மாநில நிர்வாகிகள் செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் எடுத்துரைத்தார். அனைத்து மாவட்டங்களிலும் 2022ஆம்

ஆண்டிற்கான உறுப்பினர் இணைப்புக் கட்டணம், சங்கக்குரல் சந்தா மற்றும் மாநில மைய கட்டட நிதி உள்ளிட்ட நிதி நிலுவைகளை விரைவில் வசூல் செய்து செலுத்திட அனைவரும் உரிய தொடர் நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்றும் தெரிவித்தார்.

வருவாய்த்துறை அலுவலர்கள் சந்தித்து வரும் பல்வேறு பிரச்சனைகள், பணி நெருக்கடி குறித்தும், பட்டதாரி அல்லாத துணை வட்டாட்சியர்கள் தற்போது அநேக மாவட்டங்களில் பணியிறக்கம் செய்யப்பட்டுள்ளதையும், எனவே அவர்களின் பணியிறக்கத்தினை தவிர்த்திட மாநில மையத்தின் சார்பில் எடுக்கப்படவேண்டிய தொடர் நடவடிக்கைகளின் அவசியம் குறித்தும், பல்வேறு மாவட்டங்களில் நிலவிவரும் ஊழியர் நலன் சார்ந்த பிரச்சனைகள் குறித்தும் மாநிலத்தலைவர் விரிவாக எடுத்துரைத்தார்.

அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட/வட்டக்கிளை நிர்வாகிகளுக்கு ஸ்தாபனம் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்பட வேண்டுமென்றும், எனவே பிப்ரவரி-2023 முதல் மாவட்டத்திற்கு தலா 25 நபர்கள் வீதம் நான்கு மாவட்டங்களை ஒருங்கிணைத்து மண்டல அளவில் பயிற்சி அளித்திட மாநில மையத்தின் சார்பில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்படவுள்ளது குறித்தும் தெரிவித்தார்.

மாநிலப் பொதுச்செயலாளர் திரு.சு.சங்கரலிங்கம் தனது உரையில் 26.11.2022-ல் சென்னையில் நடைபெற்ற மத்திய செயற்குழு கூட்டத்திற்கு பின்பாக கடந்த ஒரு மாத காலத்தில் மாநில மையத்தின் சார்பில் எடுக்கப்பட்டுள்ள கடந்தகால நடவடிக்கைகள் குறித்து எடுத்துரைத்தார். குறிப்பாக கடந்த 01.12.2022 அன்று வருவாய்த்துறைச் செயலாளர், வருவாய் நிர்வாக ஆணையர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை ஆணையர் உள்ளிட்ட உயர் அலுவலர்களிடம் சென்னை மத்திய செயற்குழு கூட்ட தீர்மானத்தினை வழங்கி வருவாய்த்துறை அலுவலர்களின் வாழ்வாதார கோரிக்கைகளின் மீது விரைந்து ஆணைகள் வெளியிட வலியுறுத்தப்பட்டது குறித்தும், மேலும் முதன்மை தேர்தல் ஆணையர் அவர்களை சந்தித்து 2021- சட்டமன்ற தேர்தல் செலவின நிதி இதுவரை வழங்கப்படாமல் உள்ளது குறித்தும், இதனால் தேர்தலுக்கு செலவு செய்த வட்டாட்சியர்கள் கடன் சுமையில் அவதியுறுவது குறித்தும், எனவே தேர்தல் செலவின நிதியை உடன் வழங்கிட நடவடிக்கை எடுத்திடுமாறு வலியுறுத்தப்பட்டது குறித்தும் எடுத்துரைத்தார். சென்னை மத்திய செயற்குழு கூட்ட தீர்மானத்தின் அடிப்படையில் 01.07.2022 முதல் வழங்கப்படவேண்டிய 4% அகவிலைப்படி உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள சரண்விடுப்பு ஒப்படை ஊதியத்தினை மீண்டும் வழங்குதல், பழைய பென்சன் திட்டத்தினை மீண்டும் அமுல்படுத்துதல் மற்றும் பட்டதாரி அல்லாத அலுவலர்களின் பதவி உயர்வினை உத்திரவாதப்படுத்தி அரசாணை வெளியிடக் கோருதல் ஆகிய பிரதான கோரிக்கைகளை வலியுறுத்தி அனைத்து மாவட்ட மையங்கள் மற்றும் மாநில மையத்தின் சார்பில் கடந்த 09.12.2022 அன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு நிகரி செய்தி (Fax Message) அனுப்பிய நிகழ்வு அரசின் கவனத்தினை ஈர்த்துள்ளது குறித்தும் தெரிவித்தார்.

உட்பிரிவு பட்டா மாறுதல் செய்திடும் அதிகாரத்தினை நில அளவைத்துறைக்கு மாற்றம் செய்திடக் கோரி நிலஅளவைத்துறைப் பணியாளர் சங்கத்தின் சார்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதை ஆட்சேபித்து வருவாய்த்துறைச் செயலர், நில நிர்வாக ஆணையர், நிலஅளவை மற்றும் நிலவரித்திட்ட இயக்குநர் ஆகியோரிடம் கடந்த 14.12.2022 அன்று மாநில மையத்தின் சார்பில் விரிவான முறையீடு அளித்து பட்டா மாறுதல் செய்திடும் அதிகாரத்தினை எக்காரணம் கொண்டும் வருவாய்த்துறையிலிருந்து மாற்றம் செய்திடக் கூடாது என அழுத்தம் கொடுத்து பேசப்பட்டது குறித்தும், மேலும் 2022-ஆம் ஆண்டிற்கான மாவட்ட வருவாய் அலுவலர் காலிப்பணியிடம் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதை மீண்டும் ஆய்வு செய்து திருத்திய காலிப்பணியிட மதிப்பீட்டறிக்கையினை வெளியிட வலியுறுத்தி பொதுத்துறைச் செயலரிடம் விரிவான முறையீடு அளித்து பேசப்பட்டது குறித்தும் எடுத்துரைத்தார்.

மாநிலப் பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் கடந்த 01.11.2022 முதல் 13.12.2022 வரையிலான காலத்திற்குரிய பொதுக்கணக்கு வரவு-செலவு அறிக்கை மற்றும் நடப்பாண்டிற்கான உறுப்பினர் இணைப்புக் கட்டணம், சங்கக்குரல் சந்தா, கட்டட நிதி, சேலம் மாநாட்டு நிதி, மாநில மைய காலண்டர் நிதி மற்றும் TNGEA மாநாட்டு நிதி உள்ளிட்ட அனைத்து நிதி சார்ந்த வரவு செலவு கணக்கு விவர அறிக்கையினைக் கூட்டத்தில் தாக்கல் செய்தார்.

அனைத்து மாநில நிருவாகிகளின் செழுமையான கருத்துக்கள் மற்றும் ஆக்கப்பூர்வமான விவாதங்களின் அடிப்படையில் கீழ்க்கண்ட முடிவுகள் ஒரு மனதாக எடுக்கப்பட்டன.

1) பட்டதாரி அல்லாத அலுவலர்களின் பதவி உயர்வினை உத்திரவாதப்படுத்துதல், துணை ஆட்சியர் பதவி உயர்வு வழங்குதல், சான்றிதழ் வழங்கும் பணிக்கென சிறப்பு துணை வட்டாட்சியர் பணியிடம் ஏற்படுத்துதல், 2022-ம் ஆண்டிற்கான வட்டாட்சியர் காலியிட மதிப்பீட்டு அறிக்கையினை இறுதி செய்து ஆணை வழங்குதல் மற்றும் இளநிலை வருவாய் ஆய்வாளர்/முதுநிலை வருவாய் ஆய்வாளர் பெயர் மாற்ற விதித்திருத்த அரசாணை வெளியிடுதல் உள்ளிட்ட (வரிசை எண் 2 முதல் 6 வரை குறிப்பிட்டுள்ள) பிரதானமான பின்வரும் ஐந்து கோரிக்கைகளை உடன் நிறைவேற்றிட வலியுறுத்தி எதிர்வரும் 24.01.2023 அன்று அனைத்து மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் (தலா மூவர்) இணைந்து வருவாய் நிர்வாக ஆணையர், வருவாய்த்துறை செயலாளர் மற்றும் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் ஆகியோரிடம் பெருந்திரள் முறையீடு அளித்திட முடிவு செய்யப்பட்டது.

2) தமிழகம் முழுவதும் வருவாய்த்துறையில் 2009-ம் ஆண்டு முதல் துணை வட்டாட்சியர் பட்டியல்கள் திருத்தம் செய்து வெளியிடப்பட்டதில் பட்டதாரி அல்லாத அலுவலர்கள் முதுநிலை வருவாய் ஆய்வாளர்களாக பணியிறக்கம் செய்யப்பட்டுள்ளனர். இந்நிகழ்வு பட்டதாரி அல்லாத அலுவலர்களிடையே கடுமையான மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது. எனவே பட்டியல் திருத்தத்தின் காரணமாக எந்தவொரு அலுவலருக்கும் பணியிறக்கம் ஏற்படாதவாறும், மேலும் எதிர்காலத்தில் பாதிப்பு ஏற்படாத வகையில் துணை வட்டாட்சியர் பதவி உயர்வு வழங்கிட ஏதுவாக 20.01.2023-க்கு முன்பாக உரிய ஆணைகள் வழங்கிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

3) வருவாய்த் துறையில் கடந்த மூன்று ஆண்டுகளாக துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியல் வெளியிடப்படாததால் பல்வேறு துணை ஆட்சியர் நிலையிலான பணியிடங்கள் காலியாகவும், சில பணியிடங்கள் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலை வரை பதவி உயர்வில் மிகுந்த தேக்க நிலை உருவாகியுள்ளது. இதனை கருத்தில் கொண்டு துணை ஆட்சியர் பதவி உயர்வு பட்டியலை 20.01.2023-க்கு முன்பாக வெளியிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

4) வருவாய்த்துறையில் தற்போது மிகுந்த பணி நெருக்கடியுடன் அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் பல்வேறு சான்றிதழ்கள் கோரி மிகுதியான அளவில் மனுக்கள் வருவதால் அவற்றினை முடிவு செய்வதில் ஏற்படும் காலதாமதத்தினை சரி செய்திடும் வகையில் பொது மக்களின் நலன் கருதி "முதல்வரின் முகவரி" மற்றும் பொது மக்களுக்கான சான்றிதழ் வழங்கிடும் பணிக்கென அனைத்து வட்டத்திற்கும் தலா ஒரு சிறப்பு துணை வட்டாட்சியர் பணியிடம் ஏற்படுத்திட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

5) வருவாய் வட்டாட்சியர்களின் பதவி உயர்வு பட்டியல் வெளியிட மைய நாள் ஜூலை முதல் நாளாகும். ஆனால் மைய நாள் (Crucial Date) முடிவுற்று ஐந்து மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை வட்டாட்சியர் காலிப்பணியிட மதிப்பீட்டறிக்கை வருவாய் நிர்வாக ஆணையரால் இறுதி செய்து வெளியிடப்படவில்லை. இதனால் மாவட்ட வருவாய் அலகுகளில் பணிபுரிந்து வரும் தகுதியான துணை வட்டாட்சியர்களுக்கு வட்டாட்சியர் பதவி உயர்வு அளித்திட இயலாத நிலை உள்ளது. எனவே 2022 -2023ஆம் ஆண்டிற்கான வட்டாட்சியர்

காலிப்பணியிட மதிப்பீட்டு அறிக்கையினை (Estimate of Vacancy) 20.01.2023-க்கு முன்பாக இறுதி செய்து ஆணை வழங்கிட கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

6) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் பெரும் முயற்சியின் காரணமாக இளநிலை உதவியாளர், உதவியாளர் ஆகிய பணியிடங்களை முறையே இளநிலை வருவாய் ஆய்வாளர், முதுநிலை வருவாய் ஆய்வாளர் என பெயர் மாற்றம் செய்து 2016-ம் ஆண்டில் அரசாணை வெளியிடப்பட்டு ஆறு வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதுவரை விதித்திருத்தம் வெளியிடப்படாததால் அரசாணையினை நடைமுறைப்படுத்திட இயலவில்லை. எனவே இதில் மேலும் காலம் தாழ்த்தாது 20.01.2023-க்கு முன்பாக உரிய விதி திருத்தங்களை வெளியிட தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

7) 16.08.2022 மற்றும் 01.11.2022 ஆகிய தேதிகளில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற உயர் அலுவலர்களுடனான பேச்சு வார்த்தையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் அனைத்து கோரிக்கைகளையும் உடனடியாக நிறைவேற்றிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

8) மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்புரையின் அடிப்படையில் மாநில குடிமைப் பணியில் (State Civil Service) வருவாய்த்துறை அல்லாத பிறதுறை அலுவலர்களையும் சேர்த்து தமிழ்நாடு நிர்வாக பணியமைப்பு (Tamil Nadu Administrative Service) என்ற புதிய பணியமைப்பினை ஏற்படுத்த முயற்சிப்பதினால் வருவாய்த்துறை அலுவலர்களுக்கு பதவி உயர்வில் கடுமையான பாதிப்புகள் ஏற்படும். எனவே வருவாய்த்துறையை பாதிக்கும் இச்செயலை உடனடியாக ரத்து செய்திட வலியுறுத்தி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் விரிவான முறையீடு அளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

9) புதுக்கோட்டை மாவட்ட வருவாய் அலகில் கடந்த 04.04.2012 அன்று முதுநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியல் வெளியிடப்பட்டது. மிகுதியான அளவில் காலிப்பணியிடம் இருந்தும், உரிய காலத்தில் பதவி உயர்வு வழங்கப்படவில்லை. இதனால் பட்டியலில் இடம்பெற்றிருந்த அலுவலர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே இதனை சரிசெய்திட கோரி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரால் அனுப்பப்பட்ட முன்மொழிவு அரசிடம் கடந்த ஐந்து மாதங்களாக நிலுவையில் உள்ளது. இதனை மேலும் காலம் தாழ்த்தாது உடன் முடிவு செய்து உரிய ஆணைகள் வழங்கிட தமிழக அரசை வலியுறுத்துவது என முடிவுசெய்யப்பட்டது.

10) ஒருங்கிணைந்த முதுநிலை வருவாய் ஆய்வாளர் பட்டியலில் முதுநிலை நிர்ணயித்தல் தொடர்பாக தேனி, மதுரை மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த வருவாய்த்துறை அலுவலர்களை நேரடி விசாரணை மேற்கொண்டு, வருவாய் நிருவாக ஆணையர் அவர்களால் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ள பரிந்துரையின் மீது உரிய ஆணைகள் விரைவில் பிறப்பிக்க தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

11) 2022-2023-ம் ஆண்டிற்கான மாவட்ட வருவாய் அலுவலர் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கை குறைவாக மதிப்பீடு (Estimate of Vacancy) செய்யப்பட்டுள்ளதை மீண்டும் ஆய்வு செய்து சரியான எண்ணிக்கையில் திருத்திய காலிப்பணியிட மதிப்பீட்டறிக்கையினை வெளியிட உரிய நடவடிக்கை எடுத்திடுமாறு பொதுத்துறைச் செயலாளர் அவர்களை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

12) வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்திடும் பணிக்கு ஆறு சட்டமன்ற தொகுதிகள் கொண்ட மாவட்டங்களில் தேர்தல் பணிக்கென நேர்முக உதவியாளர் (தேர்தல்) பணியிடங்கள் ஏற்படுத்துதல், தமிழக சட்டமன்ற தேர்தல் முடிவுற்று 18 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும், இதுவரை தேர்தல் செலவினங்கள் முழுமையாக வழங்கப்படாதது மற்றும் வருவாய்த்துறையில்

தேர்தல் பிரிவில் பணியாற்றி வரும் தற்காலிக இளநிலை உதவியாளர் பணியினை நிரந்தரப்படுத்துதல் ஆகியவற்றை உடன் நிறைவேற்றிட முதன்மைத் தேர்தல் அலுவலரை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

13) மாவட்ட வருவாய் அலகுகளிலிருந்து ஒருவழி/இருவழி மாவட்ட மாறுதல் கோரி அனுப்பப்பட்டுள்ள முன்மொழிவுகள் வருவாய் நிர்வாக ஆணையரகத்தில் மிகுதியான அளவில் நிலுவையில் உள்ளன. மேலும் முதுநிலை வருவாய் ஆய்வாளர், இளநிலை வருவாய் ஆய்வாளர் மற்றும் தட்டச்சர் ஆகிய நிலைகளில் மாவட்ட மாறுதல் கோரி அனுப்பப்படும் முன்மொழிவுகளை பரிசீலனைச் செய்து ஆணைப் பிறப்பித்திட அதீத கால தாமதம் ஏற்படுகிறது. இதனால் மாவட்ட மாறுதல் கோரி விண்ணப்பித்துள்ள வருவாய்த்துறை அலுவலர்கள் மிகுந்த மனச்சோர்வுடன் பணிபுரிந்து வருகின்றனர். எனவே முதுநிலை வருவாய் ஆய்வாளர்கள், இளநிலை வருவாய் ஆய்வாளர்கள் மற்றும் தட்டச்சர்கள் ஆகியோருக்கும் விரைவில் மாவட்ட மாறுதல் வழங்கிட நடவடிக்கை எடுத்திடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

14) தமிழக அரசால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட 6 மாவட்டங்களில் சிறுபான்மையினர் நலனிற்கென தனித்துறை உருவாக்கப்பட்டு இத்துறையின் கண்காணிப்பாளர் பணியிடங்கள் முழுவதும் பிற்பட்டோர் நலத்துறைப் பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்பட்டு விட்டது. ஏற்கனவே நடைமுறையில் உள்ள அரசாணைகளின் அடிப்படையில் வருவாய்த்துறைக்கு உரிய துணை வட்டாட்சியர் பணியிடங்களை ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிடுமாறு தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

15) மாவட்ட பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலகம், மாநகராட்சிகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபகக் ழகம் (TNCSC) மற்றும் தமிழ்நாடு மாநில வாணிபக்கழகம் (TASMAC) உள்ளிட்ட அலுவலகங்களில் வருவாய்த்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பணியிடங்களில் பிறதுறை அலுவலர்களைக் கொண்டு நிரப்பக்கூடாது என்றும், எந்த நிலையிலும் வருவாய்த்துறைக்கு பணியிட இழப்பு ஏற்படுத்துதல் கூடாது என்று தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

16) வருவாய்த்துறை அலுவலர்களின் அதீதமான பணி நெருக்கடிகளைக் களைந்திடும் விதமாக அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் மற்றும் இதர வருவாய்த்துறை அலுவலகங்களில் அனைத்து பிரிவுகளுக்கும், தேவையான கணினி வசதி, UPS, Scanner, Printer, அதிவேக இணையவசதி ஆகியவை ஏற்படுத்துதல் மற்றும் e-Office நடைமுறைப்படுத்திட உரியகால அவகாசம் வழங்கிடவும் தமிழக அரசை வலியுறுத்துவதென முடிவுசெய்யப்பட்டது.

17) அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் முதன்மை கோரிக்கையான பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தினை ரத்து செய்து அனைவருக்கும் வரையறுக்கப்பட்ட பழைய ஓய்வூதியத் திட்டத்தினையே மீண்டும் அமுல்படுத்திடவும், கொரோனா பெருந்தொற்றின் காரணமாக நிறுத்தம் செய்யப்பட்ட ஈட்டிய விடுப்பு ஒப்புவிப்பு ஊதியம் மற்றும் 01.07.2022 முதல் 4% அகவிலைப்படி உயர்வு ஆகியவற்றினை உடன் வழங்கிட தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

18) தமிழகம் முழுவதும் பெருவாரியான மாவட்டங்களிலிருந்து வருவாய்த்துறை அலுவலர்களின் பணி வரன்முறை செய்தல், தகுதிகாண் பருவத்தினை நிறைவு செய்திட விதித்தளர்வு ஆணைகள் வழங்குதல், பணி முது நிலையில் வேறுபாடு மற்றும் பதவி உயர்வு வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைத் தொடர்பாக மிகுதியான அளவில் மேல்முறையீட்டு மனுக்கள் வருவாய் நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பப்பட்டு பல ஆண்டுகளாக எவ்வித நடவடிக்கையுமின்றி கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனால் மாவட்ட வருவாய் அலகுகளில்

பணிபுரிந்து வரும் வருவாய்த்துறை அலுவர்கள் சொல்லொண்ணா துயரமடைந்து வருகின்றனர். எனவே இதனை களைந்திடும் நோக்கில் மாவட்டங்களிலிருந்து விரிவான புள்ளி விவரங்களைப் பெற்று வருவாய் நிர்வாக ஆணையரிடம் சமர்ப்பித்து விரைவில் முடிவு செய்திட வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

19) அரசு ஊழியர்களுக்கான 4%அகவிலைப்படி உயர்வை 1.7.2022 முதல் வழங்குதல், ஈட்டிய விடுப்பு சரண் ஊதியம் மீள வழங்குதல், பங்களிப்பு ஓய்வூதியத்தை இரத்து செய்து அனைவருக்கும் வரையறுக்கப்பட்ட ஓய்வூதியம் வழங்குதல் உள்ளிட்ட கோரிக்கைகள் குறித்து ஆலோசனைச் செய்திட ஜாக்டோ - ஜியோ உயர் மட்டக்குழு கூட்டத்தை விரைவில் கூட்டிட அனைத்து மாநில ஒருங்கிணைப்பாளர்களை வலியுறுத்துவதென முடிவு செய்யப்பட்டது.

20) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின்படி வருவாய்த்துறை அலுவலர்களின் நியாயமான மேற்கண்ட வாழ்வாதார கோரிக்கைகளைப் பரிசீலனை செய்து உரிய ஆணை வழங்கிட தமிழக அரசினைத் தொடர்ந்து வலியுறுத்துவதென்றும் இதில் முன்னேற்றம் ஏதும் ஏற்படாத பட்சத்தில் பிப்ரவரி-2023 முதல் தொடர் இயக்க நடவடிக்கை மேற்கொள்வதெனவும் முடிவு செய்யப்பட்டது.

21) மாநிலத் துணைத்தலைவர் திரு.இரா.மங்களபாண்டியன் அவர்களின் உடல் நிலை சரியின்மையின் காரணமாக இயக்கப் பணிகளை சரியாக மேற்கொள்ள இயலவில்லை என்று தெரிவித்துள்ளதை ஏற்று அவர் பொறுப்பு வகித்த மாவட்டங்களான 1) திருநெல்வேலி மாவட்டத்திற்கு மாநிலத் துணைத்தலைவர் திரு.டி.செந்தூர்ராஜன் அவர்களையும், 2)கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மாநிலச் செயலாளர் திரு.எம்.சுப்பு அவர்களையும் மற்றும் 3)தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மாநிலச் செயலாளர் திரு.ஏ.தமிழரசன் அவர்களையும் பொறுப்பு மாநில நிர்வாகிகளாக நியமிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

22) மாவட்ட மையங்களை மேலும் வலுப்படுத்தி செழுமைப்படுத்திடும் நோக்கில் மாவட்ட நிர்வாகிகளுக்கு ஸ்தாபன பயிற்சியினை எதிர்வரும் பிப்பரவரி-2023 முதல் மாவட்டத்திற்கு தலா 25 நபர்கள் வீதம் நான்கு மாவட்டங்களை உள்ளடக்கி மண்டல அளவிலான பயிற்சி அளித்திட செயல்திட்டம் வகுத்து உரிய தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்வதென முடிவு செய்யப்பட்டது.

23) தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தை மேலும் வலுப்படுத்திட அனைத்து மாவட்டங்களிலும் உறுப்பினர் இணைப்பு கட்டணம், சங்கக்குரல் சந்தா ஆகியவற்றை 31.12.2022-க்குள் 100% நிறைவு செய்திட மாவட்ட மையங்களைக் கேட்டுக் கொள்வதென முடிவு செய்யப்பட்டது. மேலும், சென்னை தலைமையக கட்டட நிதிநிலுவை, சேலம் கோரிக்கை மாநாடு பங்களிப்பு நிதி, அரசு ஊழியர் சங்க மாநாடு நிதி, மற்றும் 2022-ம் ஆண்டிற்கான TNROA நாட்காட்டி நிதி உள்ளிட்ட நிலுவை இனங்களை இந்த ஆண்டின் இறுதிக்குள் செலுத்திட வலியுறுத்துவதெனவும், மாவட்ட மையத் தேர்தலை நடத்தாமல் உள்ள மாவட்ட மையங்கள் உடனடியாக தேர்தலை ஜனநாயக முறையில் நடத்திட வலியுறுத்துவது எனவும் முடிவு செய்யப்பட்டது. மேலும் தமிழகத்திலுள்ள 313 வட்டக் கிளைகளிலும் நிர்வாகிகளைத் தேர்வு செய்து புனரமைக்க உரிய நடவடிக்கை எடுப்பதென முடிவு செய்யப்பட்டது.

இறுதியாக, மாநிலப் பொருளாளர் திரு.வெ.சோமசுந்தரம் அவர்கள் குறுகிய காலத்தில் மாநில நிர்வாகிகள் கூட்டத்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்த நாமக்கல் மாவட்ட நிர்வாகிகளுக்கும், கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

| | |
|---|---|
| S/d | S/d |
| (சு. சங்கரலிங்கம்) | (எம்.பி. முருகையன்) |
| பொதுச் செயலாளர், | மாநிலத் தலைவர், |
| 8220761781 | 9843264332 |

கட்டுரை

# பழைய ஓய்வூதியத் திட்டம்: வாக்குறுதி நிறைவேறட்டும்!



இந்திய ராணுவத்தில் சிவில் பிரிவில் கணக்குத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற டி.எஸ்.நகாரா உச்சநீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கு, ஓய்வூதியதாரர்களால் மறக்கவே முடியாதது. 1982 டிசம்பர் 17 அன்று 5 பேர் கொண்ட அரசியல் அமர்வுக்குத் தலைமை வகித்த தலைமை நீதிபதி ஒய்.வி.சந்திரசூட், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பினை வழங்கினார். 'ஓய்வூதியம் என்பது பிச்சைக் காரர் தட்டில் போடும் பிச்சைக் காசு அல்ல. அது தொழிலாளர்களின் சட்டபூர்வமான உரிமை' என அந்தத் தீர்ப்பில் அவர் குறிப்பிட்டார்.

தீர்ப்பு வழங்கப்பட்ட அந்தத் தினம், நாடு முழுவதும் 'ஓய்வூதியர் தின'மாக கடைப் பிடிக்கப்படுகிறது. 40ஆவது ஓய்வூதியர் தினம் கொண்டாடப்படும் வேளையில், புதிய ஓய்வூதியத் திட்டம் (NPS – New Pension Scheme) என்ற பெயரில் ஓய்வூதியமே மறுக்கப்படும் நிலை (No Pension Scheme) உருவாகி உள்ளது.

## கடந்துவந்த பாதை

வேலைப் பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, ஓய்வூதியம் ஆகியவை அரசு வேலை மீதான பெரும் நம்பிக்கையை உருவாக்கியிருந்தன. பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே ஓய்வூதியம் நடைமுறையில் இருந்தது. பணி ஓய்வுச் சட்டம் (1834), ராயல் கமிஷன் (1856), ஓய்வூதியத் திருத்த மசோதா (1867) உள்ளிட்ட சட்டங்களால் ஓய்வூதியம் நிலைத்து நிற்கும் சூழல் உருவானது.

1931 கராச்சி காங்கிரஸ் மாநாட்டில் ஓய்வூதியம் தொடரத் தீர்மானமும் கொண்டு வரப்பட்டது. அரசமைப்பின் 4ஆவது கூறின்படி கல்வி கொடுப்பது, வேலை கொடுப்பது,

ஓய்வூதியம் கொடுப்பது, இயற்கைச் சீற்றம் ஏற்பட்டால் மக்களுக்கு உதவுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தியாவில் 4 விதமான ஓய்வூதியத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அனைத்து ஓய்வூதியங்களுக்கும் அரசு உத்தரவாதம் உண்டு. ஆனால், புதிய ஓய்வூதியத் திட்டத்துக்கு அரசு எந்த உத்தர வாதமும் வழங்காது; பங்குச் சந்தைதான் முடிவுசெய்யும்.

## சமூகப் பாதுகாப்புக்கு வேட்டு

1991இல், புதிய பொருளாதாரக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது முதலே பிரச்சினை தொடங்கிவிட்டது. 2000ஆம் ஆண்டுவாக்கில் சர்வதேச நாணய நிதியமும் டாக்டர் பட்டாச் சார்யா தலைமையில் அமைக்கப்பட்ட குழுவும், 'ஓய்வூதியம் என்பது மிகப் பெரிய நிதிச் சுமையை அரசுகளுக்கு உருவாக்கும் (Drain on Public Finance). எனவே, பழைய ஓய்வூதியத்தை மாற்றி பங்களிப்பு ஓய்வூதி யத்தை அறிமுகப்படுத்த வேண்டும்' எனப் பரிந்துரைத்தன. புதிய ஓய்வூதியத் திட்டம் 2003 டிசம்பர் 22 அன்று, பாஜக ஆட்சிக் காலத்தில் நிதி அமைச்சக ஆணை ஒன்றின் மூலமாகக் கொண்டுவரப்பட்டது.

அறிமுக நிலையிலேயே நாடாளுமன்ற இடதுசாரி உறுப்பினர்கள் அதைக் கடுமையாக எதிர்த்தனர். ஆனால், சட்டம் நிறைவேற்றப் படாமல், புதிய ஓய்வூதியத் திட்டம் 2004 ஜனவரி 1-லிருந்து பணியில் சேர்ந்தவர் களுக்குப் பங்களிப்பு ஓய்வூதியமாக மாறியது. தமிழ்நாட்டில் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் 2002 வேலைநிறுத்தத்தில் பங்கெடுத்தவர்களைப் பழிவாங்கும் விதத்தில் 2003 ஏப்ரல் 1ஆம் தேதியே அது அறிமுகப்படுத்தப்பட்டது.

## பங்களிப்பு ஓய்வூதியத்தின் பாதகம்

ஊழியர்களின் சம்பளத்தில் 10% (Pay DA) பிடிக்கப்படும். இதுவும் ஒரு மாதிரியான சம்பள பிடித்தம்தான். அரசு 10%-ஐ ஊழியர்கள் கணக்கில் போடும் (மத்திய அரசில் தற்போது 14%). இரண்டும் சேர்ந்து ஓய்வூதிய ஒழுங்குமுறை ஆணையம் நியமித்துள்ள நிதி மேலாளர்கள், பரஸ்பர நிதி, எல்ஐசி, யூடிஐ உள்ளிட்ட பல்வேறு பங்குகளில் முதலீடு செய்யப்படும். பங்குச் சந்தையின் ஏற்ற இறக்கத்துக்கு உட்பட்டு வட்டி ஏறும், இறங்கும். 2008இல் பங்குச் சந்தை வீழ்ச்சியின்போது பல ஆயிரக்கணக்கான கோடி வட்டி வருவாய் குறைந்தது. முதலீட்டுக்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

வரையறை செய்யப்பட்ட (பழைய ஓய்வூதியம்) வாங்கும் சம்பளத்தில் 50% ஓய்வூதியமாகச் சட்டப்படி வழங்கப்படும் (சம்பளத்தில் எந்தப் பிடித்தமும் செய்யப் படாமலேயே). பணியிலிருந்து ஓய்வுபெறுகிற போது புதிய ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்தவர் களுக்கு, சேர்த்த மொத்த பணத்தில் 60% மட்டும் வழங்கப்படும். 40% ஓய்வூதிய ஆண்டு திட்டத்தில் போடப்படும். அன்றைய பங்குச் சந்தை நிலவரப்படி ஓய்வூதியம் கிடைக்கும்.

## நிதிதான் பிரச்சினையா?

புதிய ஓய்வூதியத் திட்டம் தொடங்கியதி லிருந்து இன்றுவரை பல கோடிப் பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளார்கள். இதில் தனியாரும் தனியார் நிறுவனத் தொழிலாளர் களும் சேரலாம். புதிய ஓய்வூதியத் திட்டத்தில் மத்திய, மாநில அரசு ஊழியர்கள் சேர்த்து வைத்துள்ள மொத்தத் தொகை ரூ.6,30,376 கோடி. இன்று இருக்கும் வரையறை செய்யப் பட்ட ஓய்வூதியத்தை 1954இல் தொடங்கு கின்றபோது, மத்திய அரசு ஊழியர்களின் கணக்கிலிருந்த பங்களிப்பு வருங்கால வைப்பு நிதியிலிருந்த பணத்தைச் சுழல் நிதியாக எடுத்துக்கொண்டுதான் தொடங்கப்பட்டது.

இன்றும் தொழிலாளர் வைப்பு நிதியில் வழங்கப்படும் ஓய்வூதியம்கூட, சேர்ந்த மொத்தப் பணத்தில் ஒரு பகுதியைச் சுழல்நிதி யாகப் பயன்படுத்தித்தான் வழங்கப்படுகிறது. எனவே மத்திய, மாநில அரசுகளுக்குப் பணம்தான் சுமையென்றால் அரசு ஊழியர்கள் சேர்த்து வைத்துள்ள ரூ.6,30,376 கோடியைச் சுழல் நிதியாகப் பயன்படுத்தி ஓய்வூதியம் வழங்க முடியும்; அரசுக்கு நிதிச் சுமையும் ஏற்படாது.

எல்லா மாநில அரசுகளும் இந்தத் திட்டத்தில் சேர வேண்டும் எனும் கட்டாய மில்லை என, 2013இல் நாடாளுமன்றத்தில் சட்டம் இயற்றியபோது அன்றைய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் அறிவித்தார். மேற்கு வங்க மாநிலம் இதுவரை இதில் சேரவில்லை. திரிபுராவில் பாஜக ஆட்சி வந்த பிறகுதான் இந்தத் திட்டம் அமலபடுத்தப்பட்டது. 2022 செப்டம்பர் 30 கணக்கின்படி புதிய ஓய்வூதியத் திட்டத்தில் தமிழ்நாட்டில் 6,02,377 பேர் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளார்கள்.

அவர்கள் சேர்த்துவைத்துள்ள பணம் ரூ.53,000 கோடி. அதிமுக அரசு முறையாக இதை முதலீடு செய்யாததால் தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாயை இழந்துகொண்டிருக்கிறது. அதிமுக அரசு ஓய்வூதிய ஒழுங்குமுறை ஆணையத்தில் (PFRDA) சேரவே இல்லை. எனவே, இந்தத் திட்டத்திலிருந்து வெளியேறுவதில் எந்தச் சிக்கலும் இல்லை.

புதிய ஓய்வூதியத் திட்டத்தில் சேர்ந்த மத்திய அரசு ஊழியர் பணிக்காலத்தில் இறந்து போனால் பழைய ஓய்வூதியத்தின்படி குடும்ப ஓய்வூதியம், பணிக்கொடை வழங்கப்படும். ஆனால், மாநில அரசு ஊழியர்களுக்கு இது பொருந்தாது. மாநில அரசே பணிக்கொடைச் சட்டத்தை மதிக்கவில்லையோ எனும் கேள்வியை இது எழுப்புகிறது. பழைய ஓய்வூதியத்தைத் திரும்பக் கொண்டு வருவோம் எனத் தேர்தல் அறிக்கையில் திமுக உறுதியளித்தது.

ஆட்சிக்கு வந்து ஓராண்டைக் கடந்து விட்டது. இமாச்சலப் பிரதேசத்தில் இதே வாக்குறுதியை அளித்து காங்கிரஸ் ஆட்சியைப் பிடித்துவிட்டது; முதலாவது, அமைச்சரவைக் கூட்டத்திலேயே, பழைய ஓய்வூதியத் திட்டம் கொண்டுவரப்படும் என்றும் அறிவித் திருக்கிறது. ராஜஸ்தான், சத்தீஸ்கர் மாநிலங் களில் அது ஏற்கெனவே நிறைவேற்றப் பட்டுவிட்டது. தமிழக முதல்வரும் சொன்னதைச் செய்வார் என நம்புவோம்! -

கட்டுரையாளர் : எம். துரைப்பாண்டியன்
செயல் தலைவர்,
மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனம்
நன்றி : இந்து தமிழ் திசை



தென்காசி மாவட்டம் தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்க கட்டடத்தில், மாவட்ட நிர்வாகிகளின் கூட்டத்தில், ஊழியர்களின் நலன் குறித்த கோரிக்கைகள் தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது

# அத்தியாவசிய பாதுகாப்பு சேவை அவசரச்சட்டம் என்ற தொழிலாளர் விரோத சட்டம்

மத்தியில் ஆளும் ஒன்றிய அரசு கிட்டத்தட்ட எஸ்மா சட்டம் போன்ற கடுமையான சரத்துகளைக் கொண்ட அத்தியா வசியப் பாதுகாப்பு சேவை அவசரச்சட்டம் 2021-என்ற கடுமையான சட்டத்தை அவசரச் சட்டம் மூலம் கொண்டுவந்துள்ளது. இந்தியக் குடியரசுத் தலைவர், இந்த அவசரச் சட்டத்தை பிறப்பிக்க அத்தியாவசியமான பாதுகாப்பு சேவைகளைத் தொடர்ந்து இயக்குவதற்கு என சூழல் குறித்த உண்மைக்கு புறம்பான அறிவிப்பு வெளியிட்டாலும், வெளிப்படை யான இந்த சட்டம், வேலை நிறுத்தத்தைத் தடை செய்யவும், நாடு முழுவதும் உள்ள 41 பாது காப்பு தளவாட உற்பத்தி நிறுவனங்களை நிர்வகிக்கும் பாதுகாப்பு தொழிற்சாலைப் போர்டு என்ற அமைப்பைக் கலைத்துவிட்டு இந்தத் தொழிற்சாலைகளை கார்ப்பரேட் நிறுவனங்களாக்கி அதன் மூலம் இறுதியில் அவற்றைத் தனியாருக்கு விற்பதற்கான திட்டத்திற்கு எதிர்ப்பைத் தடை செய்யவுமே இந்த அவசரச் சட்டம் போடப்பட்டுள்ளது. இது அரசியலமைப்புச் சட்டத்திற்கு புறம்பானதாகவும், சந்தேகத்திற்கிடமானதாக வும் ஒருபுறம் இருந்தாலும், நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டங்களான, தொழிற்தகராறு சட்டம் 1947 மற்றும் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட தொழிற் உறவு தொகுப்பு சட்டம் 2020 ஆகியவற்றிற்கு புறம்பாக இருப்பதோடு, அநேகமாக தற்போது நடைமுறையில் இருக்கும் அனைத்து சட்ட பாதுகாப்புகளுக்கும் புறம்பாகவும் உள்ளது. அரசின் நாசகர கொள்கைகளுக்குக் குறிப்பாக கண்மூடித்தனமான தனியார்மயத்திற்கு எதிராகவுள்ள பொதுவான எதிர்ப்பையும், அமைப்பு ரீதியாக திரண்டுள்ள தடைகளையும், நசுக்குவதே இதன் நோக்கம்.

அத்தியாவசிய பாதுகாப்பு சேவை அவசரச்சட்டம் 2021 ஜூன் மாதம் 30ந் தேதி நள்ளிரவிலிருந்து உடனடியாக அமலுக்கு வருவதாக பிறப்பிக்கப்பட்டது. நாடாளு மன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடர் 19 ஜூலையிலிருந்து தொடங்கயிருந்த நிலையில், ஒன்றிய அரசின் அரசிதழ் (கெசட்) அறிவிக்கை முரணாக தெரிவிப்பது என்னவெனில் குடியரசுத் தலைவர் இந்த அவசரச் சட்டத்திற் கான சூழல் குறித்து திருப்தி கொண்டுள்ளார். ஏனெனில் தற்போது நாடாளுமன்ற கூட்டம் நடைபெறவில்லை என்பதாக குறிப்பிடுகிறது. ஆனால் நாம் நினைவில் கொள்ள வேண்டியது இந்த அவசரச் சட்டம் ஒன்றிய அரசு தீவிரமாக, பாதுகாப்பு தளவாட தொழிற்சாலைகள் வாரியத்தை கலைத்துவிட்டு, கார்ப்பரேட் மயமாவதாக அறிவிப்பு வெளியிட்ட சில வாரங்களில் பாதுகாப்பு தளவாட சிவில் தொழிலாளர்கள் ஜூலை 26 வேலை நிறுத்த நடவடிக்கைக்கு போவதென்ற முடிவை எதிர்பார்த்தே இந்த சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஆனால் இந்த அவசரச் சட்டம், பாதுகாப்பு தொழிலாளர் பெடரேசன்களின் ஐக்கிய மேடை பாதுகாப்பு தளவாட தொழிற்சாலைகளின் வலைப்பின்னலைக் கார்ப்பரேட் வழியாக தனியார்மயமாக்குவதற்கு எதிரான வேலை நிறுத்தம் என்ற முடிவை சீர்குலைக்கவும், அதனை தடுப்பதற்காகவும் மட்டுமல்ல, அது பாதுகாப்பு தளவாட உற்பத்தி துறைகளோடு நின்றுவிடாமல், அரசு நிர்வாகம் அனைத்து தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் தொழிற்சங்கத்தின், வேலைநிறுத்தம் உட்பட அனைத்து கூட்டு செயல்பாட்டையும் தடை செய்திடும் நோக்கத்துடன், வடிவமைக்கப்பட் டுள்ளது, இந்தச் சட்டம் எந்த ஒரு துறையிலும் பணியாற்றும் தொழிலாளர்களின் உரிமையான நியாயமான காரணங்களுக்கான கூட்டாக செயல்படுவது சட்ட வழிமுறைகளுக்குட்பட்டு

எந்த வடிவிலாவது, போராடுவது போன்ற வற்றிற்கு எதிராக தடையை நீடித்திட வழி செய்திடும் அதிகாரத்தை வழங்குகிறது. ஆந்த தொழில் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ எந்த வகையிலாவது அது பாதுகாப்பு தளவாட உற்பத்தி நிலையங் களோடு தொடர்புடையது என கருதும் பட்சத்தில் இந்த சட்டம் பொருந்தும், ஒரு தொழில் பாதுகாப்பு தொழிலோடு சம்பந்தப்பட்டது என முடிவு செய்யும் அதிகாரம் முழுமையாக ஒன்றிய அரசிடம் மட்டுமே குவிக்கப்பட்டுள்ளது.

இந்த அவசரச் சட்டம் ஒன்றிய அரசிற்கு வேலை நிறுத்தங்களை (வேலை நிறுத்தம் என்பது வழக்கமான பதம் பயன்படுத்தப்பட வில்லை, இங்கு இது பல வித்தியாசமான பொருள்களில் பயன்படுத்தப்படுகிறது), லாக்-அவுட் மற்றம் லே-ஆஃப் போன்றவைகளை அத்தியாவசிய பாதுகாப்பு தளவாடம் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளில் தடை செய்யும் அதிகாரத்தை அளிக்கிறது. ஆகவே தீங்கு விளைவிக்கும் இந்த சட்டத்தின் விளையாட்டு வேலை நிறுத்தம் என்பதற்கான புது வியாக்கியானத்திலிருந்து தொடங்குகிறது.

இந்த அவசரச் சட்டம், வேலை நிறுத்தம் அதன் தொடர்புடைய நடவடிக்கைகள் என்பதற்கான வரையறையை விரிவாக்கி தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் தொழிற்சங்கங்களின் கிட்டத்தட்ட அனைத்து விதமான எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் போராட்டங்களையும் இந்த வரையறைக்குள் அடக்கியுள்ளது. இந்த அவசரச் சட்டம் வேலைநிறுத்தம் என்பதற்கு கீழ்க்கண்டவாறு வரையறுக்கிறது 1) வேலையை நிறுத்துவது 2) மெதுவாக வேலை செய்வது (கோ ஸ்லோ) 3) தர்ணா (சிட் டவுன்) 4) உள்ளிருப்பு (ஸ்டே இன்) 5) அடையாள வேலை நிறுத்தம், 6) ஆதரவு வேலை நிறுத்தம் 7) ஒட்டு மொத்தமாக தற்செயல் விடுப்பு எடுப்பது, அத்தியாவசியப் பணிகள் என்று சொல்லப்படும் பணியில் ஒரு அமைப்பின் தொழிலாளர்கள் (சங்கம்) கூட்டாக செயல்படுவது, அல்லது ஒருங்கிணைந்து மறுதலிப்பது, அல்லது பொதுவான புரிதலின் அடிப்படையில் (ஆணையை) மறுப்பது எத்தனை நபர்களாக இருந்தாலும் என விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இங்கு ஓவர் டைம் பார்க்க மறுப்பதையும் வேலை நிறுத்தம் என கொள்ளப்படும். சும்பந்தப்பட்ட அதிகாரி, அத்தியாவசியப் பணி என்று சொல்லப்படும் பணியில், அவ்வாறு மறுப்பதன் காரணமாக அந்த வேலை தடைபடும் என நினைத்தாலோ அல்லது உண்மையில் தடைபட்டாலோ அல்லது வேலையின் வேகம் குறைந்தாலே அல்லது வேலையில் தடைகள் ஏற்பட்டாலோ வேலை நிறுத்தம் செய்ததாக கருதப்படும். 1947 வருடத்திய தொழிற் தகராறு சட்டம் வேலை நிறுத்தம் என்பதைச் சுருக்கமாக வேலையை நிறுத்துவது என்று மட்டுமே வரையறுத் துள்ளது. வேறு எந்த வரையறையும் கிடை யாது. தொழிலுறவு குறியீடு (இன்டஸ்ட்ரியல் ரிலேசன்ஸ் கோட்-2020) இத்துடன் புதிதாக சேர்த்திருப்பது, ஒருங்கிணைந்து 51 சதவீத தொழிலாளர்கள் தற்செயல் விடுப்பு எடுப்பது என்பதை வேலை நிறுத்தம் என்பதற்கான வரையறையிலிருந்து நீண்ட தூரம் பயணித்து கிட்டதட்ட அனைத்து விதமான நடவடிக்கை களையும் அது நடவடிக்கைக்குத் தூண்டுவது, கிளர்ச்சி பிரச்சாரம் (அனைத்து பிரச்சாரம், போராட்ட நடைமுறைகள், எதிர்ப்பு இயக்கங் கள்) ஆகிய எல்லாமே வேலை நிறுத்தம் என்ற வரையறையில் கொண்டு வந்துள்ளது.

அவசரச் சட்டத்தில் அத்தியாவசியப் பாதுகாப்பு பணிகள் என்பதன் அர்த்தம் என்ன? அத்தியாவசியப் பணிகள் என்பதற்கான வரையறை, அது பாதுகாப்பு தளவாட உற்பத்தி மற்றும் சேவைகளோடு கொண்டுள்ள தொடர்பு ஆகியவை விரிவுபடுத்தப்பட்டு, கிட்டதட்ட அனைத்து தொழில்களையும் இந்த வரையறைக் குள் கொண்டு வந்து அங்கும் இந்த தடைகளை யும், தொழிலாளர் உரிமைகளையும் நசுக்க அரசுக்கு இந்த அவசரச் சட்டம் அதிகார மளிக்கிறது.

அத்தியாவசியப் பாதுகாப்பு சேவைகள் என்பது கீழ்க்கண்ட எந்த சேவையையும் உள்ளடக்கியதாகும்.

பாதுகாப்பு துறையோடு சம்பந்தப்பட்ட பொருட்கள் மற்றும் இயந்திரங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் அல்லது அந்தப் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கள்.

ஆயுதப் படைகளின் கீழ் இயங்கும் நிறுவனங்கள் அல்லது அவற்றுடனும், பாதுகாப்பு துறையுடனும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள்.

மேலும் இவற்றில் சேவை புரியும் நிறுவனங்கள், அவற்றின் சேவை நிறுத்தப் பட்டால், அவ்வாறு சேவை அளிக்கும் நிறுவனங்கள் மற்றும் அவற்றின் பணியாளர் களின் பாதுகாப்பு பாதிக்கப்படும் என்பவையும் அடங்கும்.

இதற்கு மேலும் அரசு எந்த சேவைத் துறையையும் அத்தியாவசிய பாதுகாப்பு பணிகள் என அறிவிக்க அதிகாரம் அளிக்கிறது. அந்த துறையில் வேலை நிறுத்தம் கீழ்க்கண்ட வைகளைப் பாதிக்கும் பட்சத்தில் அ) யுத்த தளவாட கருவிகள், பொருட்கள் உற்பத்தி ஆ) இத்தகைய உற்பத்தியில் ஈடுபடும் நிறுவனங்கள், அலகுகள் இயக்கம் மற்றும் பராமரிப்பை பாதிக்கும் எனில், இ) பாதுகாப்பு துறையில் பயன்படுத்தப்படும் உபகரணங்களின் பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு, இதற்கு மேலும் இந்த அவசரச் சட்டம் தொழிற் தகராறு சட்டத்தில் பொது பயன்பாட்டு சேவைகள் என்பதை அத்தியாவசிய பாதுகாப்பு சேவையில் இயங்கும் தொழிற்சாலை நிறுவனங்கள் அல்லது அலகுகள் என திருத்தியுள்ளது.

இந்த அவசரச் சட்டத்தின் பிரிவு 3ன் படி ஒன்றிய அரசுக்கு வேலை நிறுத்தத்தை தடை செய்து ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தேவையேற்பட்டால் இந்த நலன்களை முன்னிறுத்தி 1) இந்தியாவின் சுயாதிபத்தியத்திற்கும், ஒற்றுமையையும் காக்க 2) நாட்டின் பாதுகாப்பை உறுதி செய்ய 3) பொது அமைதியை காக்க 4) பொது நன்மையை கருதி 5) நாகரிகம் கருதி 6) ஒழுக்கம் காக்க இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டால் அது 6 மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும். மேலும் 6 மாதங்களுக்கு அதனை நீட்டிக்கலாம். வேறெந்த சட்டத்திலும், தொழிலாளர் வர்க்கம் தனது கடைசி ஆயுதத்தை-வேலை நிறுத்த உரிமையை பறிப்பதற்கான இப்படிப்பட்ட பலவீன மான காரணங்களை நாம் பார்க்க முடியாது.

ஆகவே, ஒன்றிய அரசு எந்தத் தொழிற் சாலை பிரிவிலும், அதில் அதன் துணை தொழிற்சாலைகளும், பாதுகாப்புத் தளவாட தொழிற்சாலைகளுக்கு இடுபொருள் வழங்கும் நிறுவனங்களிலும்-உதாரணமாக, மின் உற்பத்தி, இரும்பு-எஃகு தொழிற்சாலை, கனிம தொழில் அல்லது வேறெந்த தொழிற்சாலையை யும், அத்தியாவசிய பாதுகாப்ப சேவை என்று அறிவித்து அந்த தொழிலகங்களில் வேலை நிறுத்த தடை, தொழிலாளர்களின் உரிமை களுக்கு தடை, இயல்பான தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆகியவற்றை தடை செய்ய கட்டுபாடற்ற அதிகாரத்தை இந்த அவசரச் சட்டம் வழங்குகிறது. ஆகவே, வேலை நிறுத்தத்தை தடை செய்யும் அரசின் கரங்கள் மிகவும் ஆபத்தான வகையில் எந்த ஒரு தொழிற்சாலைக்கும் நீட்டிக்க வழி வகை செய்யப்பட்டுள்ளது.

சட்ட விரோத வேலை நிறுத்தத்தில் என்று சொல்லப்படுவதில் தொடங்கும் மற்றும் பங்கெடுக்கும் நபர்களுக்கு தண்டனையாக ஓராண்டு சிறை அல்லது ரூ.10000 அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து, இதனை தூண்டுபவர்கள், கிளறிவிடுபவர்கள், அல்லது இந்த சட்ட விரோத வேலை நிறுத்தத்தைத் தொடர நடவடிக்கை எடுப்பவர்களுக்கு (இதனை வழக்கமான வேலைநிறுத்தத்துடன் பிரச்சார நடவடிக்கை என புரிந்து கொள்ள வேண்டும்) அல்லது தெரிந்தே அந்த நோக்கங் களுக்கு தண்டனையாக இரண்டு ஆண்டு சிறை அல்லது ரூ.15000 அபராதம் அல்லது இரண்டும் இதற்கு மேல் சம்பந்தப்பட்ட தொழிலாளி ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டு

பணி நீக்கம் செய்யப்படலாம். இந்த அவசரச் சட்டத்தின் மூலம் குற்றம் என அறிவிக்கப் பட்டுள்ள அனைத்து செயல்களும், பிணையில் வெளியில் வரமுடியாத, பெரும் குற்றமாகும்.

தொழிலாளி வர்க்கத்தின் வேலை நிறுத்த உரிமை நீண்ட காலம் மனிதத் தன்மையற்ற முதலாளித்துவ சுரண்டலுக்கு எதிராக போராடி பெற்ற உரிமையாகும். அதன் பிறகு தொழிற் தகராறு சட்டம் 1947 மற்றும் தொழிற்சங்க சட்டம் 1926 ஆகியன வேலை நிறுத்த உரிமையை அங்கீகரித்தன. தொழிற்தகராறு சட்டம், பொது பயன்பாட்டுத் துறைகளில் வேலை நிறுத்தம் செய்வதற்கு சில வழிமுறைகளை வைத்துள்ளது. அது ஒட்டு மொத்தமாக வேலை நிறுத்தத்தையே இந்த அவசரச் சட்டம் போல் தடை செய்யவில்லை. இந்த அவசரச் சட்டம் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 87, 98 ஆகியவற்றின் முடிவுகளை அப்பட்டமாக மீறுகிறது. (சங்கம் அமைக்கும் உரிமை மற்றும் கூட்டு பேர உரிமை) இந்த சட்டத்தின் நோக்கம், பாதுகாப்பு தளவாட உற்பத்தி துறையுடன் மட்டும் நின்று விடுவதில்லை இந்த சட்டத்தை ஊன்றி படித்தால், கிட்டத்தட்ட எந்த தொழிற் சாலைக்கும் இதனை அமல்படுத்தவும் எல்லா இடத்திலும் தொழிற்சங்கத்தைக் கட்டுப் படுத்தவும் தொழிற்சங்க நடவடிக்கைகளை தடை செய்யவும் பயன்படுத்தும் அதிகாரத்தை அரசாங்கத்திற்கு வழங்கியிருப்பதை காணலாம். அரசு ஏற்கனவே அந்த பாதையில் அடியெடுத்து வைத்துக் கொண்டிருக்கிறது. பொதுத்துறை யிலும், தனியார் துறையிலும் ஏராளமான தொழிற்சாலைகள் பொது பயன்பாட்டு சேவைகள் என அறிவிக்கப்படுகிறது. கடைசியாக எஃகு தொழிற்சாலைகள் பொது பயன்பாட்டு சேவை என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய தொழிலாளர் வர்க்கத்திற்கு இது புதிய நிகழ்வோ அல்லது அனுபவமோ இல்லை. சுதந்திர இந்தியாவில் கடந்த காலங்களில் பல சமயங்களில் அரசாங்கங்கள் இத்தகைய பயங்கர சட்டங்களை கொண்டு வந்துள்ளதை நம்மால் நன்கு நினைவு கூர முடியும் 61 ஆண்டுகளுக்கு, முன் நாடு தழுவிய ஒன்றிய அரசு ஊழியர்கள் ஜுலை 11,12 தேதிகளில் நடத்திய மகோன்னதமான வேலை நிறுத்தத்தின் போது, ஒரு அவசரச் சட்டம், எஸ்மா பிரகடனப்படுத்தப்பட்டது. அந்த சட்டத்தின் ஷரத்துகள் தற்போது பிறப்பிக்கப் பட்டுள்ள சட்டத்தைப் போன்றது. இதைப் போன்ற இதர அவசர சட்டங்களும், நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டங்களும் உண்டு. உதாரணமாக இந்திய பாதுகாப்பு சட்டம் (டிஐஆர்), மிசா சட்டம் (உள்நாட்டு பாதுகாப்பு அமலாக்க சட்டம்) போன்ற சட்டங்கள், ஜனநாயக இயக்கங்களையும் தொழிலாளர் வர்க்க இயக்கங்களையும் ஒடுக்கிட கருவிகளாக பயன்படுத்தப்பட்டன. ஆனால் அவை யாவும் இந்திய தொழிலாளி வர்க்க இயக்கம் ஒன்றுபட்டு தடைகளை தகர்த்தெறிந்து போராடுவதை தடுக்க இயலாமல் போனது. கடந்த காலங்களில் தொழிலாளி வர்க்கம் இத்தகைய தாக்குதல் களை எதிர் கொண்டது. இந்த முறையும் வெற்றிகரமாக எதிர் கொள்ளும். ஒன்று பட்ட இயக்கங்கள் கட்டமைப்பதிலும் முன்னெடுத்து செல்வதிலும் எந்த சுணக்கமும் இருக்கப் போவதில்லை.

ஆகவே, தொழிலாளி வர்க்க இயக்கம் தற்போதைய அரசின் இத்தகைய விஷமத் தனங்களை ஏற்கவும் போவதில்லை. அவர்கள் போராடி பெற்ற உரிமைகளின் மீதான தாக்குதல்களைப் படுத்துக் கொண்டு வேடிக்கை பார்க்கவும் போவதில்லை. நமது உரிமைகள் மீது தாக்குதல் வரும் போது அடங்க மறுப்பதும், கடும் எதிர்ப்பு காட்டுவதுமே நமக்கு முன்னுள்ள ஒரே வழி, இந்தத் தாக்குதல் நமது உரிமைகள் மீது மட்டும் வரவில்லை. நமது நாட்டு உற்பத்தி வளங்களை ஏலம் விடுவதற்கும், விற்பதற்குமான தேச விரோத நடவடிக்கைகளுக்கு எதிராகவும் போராட வேண்டியுள்ளது. தோழிலாளி வர்க்க இயக்கங்கள் தங்களை அந்த வழிக்கு தயார் செய்து கொள்ள வேண்டும். நாம் போராடுவோம், வெற்றி பெறுவோம்! ■



நாமக்கல் மாவட்டத்தில் 19.12.2022 ல் அன்று நடைபெற்ற
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின்
மாநில நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்துக்கொண்ட நிர்வாகிகள்




18.12.2022ல் திருவள்ளூர் மாவட்டத்தில் 2022-24 ஆகிய இரண்டு வருடங்களுக்கு புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட TNROA மாவட்ட நிர்வாகிகளுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் விஜயகுமாரி அவர்களால் சான்றிதழ் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் TNROA முன்னாள் மாநிலப் பொருளாளர் "சிறைச்சென்ற செம்மல்" தோழர் கோ.இளங்கோவன், மாநிலத் துணைத் தலைவர் தோழர் ஓ மணிகண்டன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.



தேனி மாவட்டத்தில் நடைபெற்ற வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் மாவட்ட பொதுக்குழுவில் TNROA மாநிலச் செயலாளர் தோழர் தமிழரசன் அவர்கள் கலந்துகொண்டார்.

"VARUVAITHURAI ALUVALAR SANGA KURAL"
January 2023

Under Postal Regd No. : TN/CH(C) / 295 / 15-17
RNI No. TN BIL 2000 / 3800 Dt : 6.6.2002

**தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் வருவாய்த்துறை அலுவலர்களின் கோரிக்கைகள் குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்களின் தலைமையில் நடந்த உயர்மட்ட பேச்சுவார்த்தையில் தலைமைச் செயலக உயரதிகாரிகள், வருவாய்த்துறை உயரதிகாரிகள் மற்றும் TNROA மாநில நிர்வாகிகள்.**

Publishing Date 3rd Week of Every Month
Registered New Paper
POSTED AT EGMORE RMS/1 PATRIKA CHANNEL
POSTED WITHOUT PRE-PAYMENT SYSTEM /
UNDER LICENCE NO. TN/PMG (CCR) / WPP 3 / 2015-2017

பெறுநர் :
திரு / திருமதி



If undelivered Please Return to :
தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கம்
ப.எண். 38/2, புதிய எண். 12,
கிருஷ்ணாப்ப தெரு, சேப்பாக்கம்,
சென்னை - 600 005



**Printed and Published by M.P.Murugaian on behalf of Tamil Nadu Revenue Officials' Association and Printed at Sekar Offset Printers, 168/1, Big Street, Chepauk, Chennai - 600 005 and published from No: 12, Krishnappa Street, Chepauk, Chennai - 600005. Editor K.Kumaresan.**